விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 04 புதன்கிழமை (20.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 275

# நாட்டின் நல்லிணக்கத்திற்கு வடக்கு தேர்தல் நல்வாய்ப்பு



## பான் கீ மூன் சுட்டிக்காட்டு

(நியூயோர்க்) வடக்கு மாகாண சபைத் தேர்தல் இலங்கையில் இனங்களுக்கிடையே அரசியல் சமரசத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான நல்ல சந்தர்ப்பம் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீன் மூன் தெரிவித்துள்ளார்.

நாளை 21ஆம் திகதி சர்வதேச கவனத்தை ஈர்த்த வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் வடக்குத் தேர்தல் குறித்த செய்தியை நேற்றையதினம் வெளியிட்டுள்ளார்.

அதில் வட மாகாண சபைத் தேர்தல் மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்த பான் கீ மூன் ,

மாகாண சபைத் தேர்தல் வடக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சிறந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

# நாளைய வடக்குத் தேர்தலில் அனைவரும் வாக்களியுங்கள்

## தீர்க்கமான தேர்தல்; கபே அழைப்பு

நாளை நடைபெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தல் ஒரு முக்கிய தேர்தலாக அனைத்துத் தரப்பாலும் நோக்கப்படுகிறது.

எனவே வர்க்காளர்கள் அதன் முக்கியத்துவம் உணர்ந்து வாக்களிப்பில் ஈடுபடுட்டு வாக்களிப்பு வீதத்தை அதிகரிக்க செய்ய வேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளில் ஒன்றான கபேயின் தேசிய அமைப்பாளர் அஹமட் மனாஸ் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய மாகாணங்களைவிட வடக்கு மாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் மிகக்குறைவாகவே இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் 87 தேர்தல் முறைப்பாடுகளும யாழ்ப்பாணத்தில் 33 தேர்தல் முறைப்பாடுகளும் இதில் 27 தேர்தல் சட்டவிதி மீறல்களாகவும் 8 வன்முறைச்சம்பவங்களும் பதிவாகி இருந்தன.

வடக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

# எமது நிலங்களை மீட்டுத் தாருங்கள்

## கோபாலசாமியிடமும் உருக்கம்

(யாழ்ப்பாணம்)

எங்களுக்கு ஒன்றும் வேணடாம் எமது நிலங்களை மீட்டுத்தாருங்கள் அதுவே போதும் என இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்கள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள இந்தியாவின் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் என்.கோபாலசுவாமியிடம் (19ஆம் பக்கம் பார்க்க)



# நீதித்துறை சுதந்திரம்; இலங்கை அலட்சியம்

## கானாவில் இருந்து குரல்

இலங்கையின் பிரதம நீதியரசர் சட்டத்திற்கு முரணான வகையில் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடத்தப்படுவதற்கான தகுதி குறித்து கானா சட்டத்தரணிகள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

(19ஆம் 'பக்கம் பார்க்க)

# வடக்கில் கூட்டமைப்பு வென்றாலும் அதிகாரங்கள் ஜனாதிபதியிடமே!

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் வாசுதேவ



வட மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினாலும் அந்த மாகாணத்துக்கு விசேட அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

அவ்வாறான விசேட சலுகைகள் ஏதும் வடக்கிற்கு வழங்குவதாயின் அதை ஜனாதிபதியும், நாடாளுமன்றமும்தான் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்திகளை நாம் தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்துவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் குற்றம் சுமத்தி வருகிறது. இது உண்மையானால், சர்வதேசத்திலிருந்து வருகை தந்திருக்கும் தேர்தல் கண்காணிப்பாளர்கள், தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் இதுதொடர்பில் முறையிட்டு எமக்கெதிராக நடவடிக்கைகளை எடுக்கட்டும். ஆனால், நாம் தேர்தல் சட்டத் திட்டங்களை மீறி ஒரு போதும் (19ஆம் பக்கம் பார்க்க)

# கோயில் பூசாரி கொடூரக் கொலை

## கிளிநொச்சியில் சம்பவம்

(கிநொச்சி)

கிளிசொச்சி அம்பாள் குளக் கிராமத்தில் கோவில் ஒன்றில் தனிமையாக இருந்த பூசாரி ஒருவர் மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது வீடு அமைந்துள்ள காணியில் உள்ள சிறிய கோவிலில் வைத்தே குறித்த பூசாரி இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கும் 6.30ற்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றிருக்கலாம் என (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



சுமார் ஐந்து மாத வயதுடைய வெள்ளை நிறக்குரங்கொன்று அம்பாறை வனஜீவராசிகள் மிருக வைத்திய பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அம்பாறை வீடொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்த வெள்ளைக் குரங்கு மிருக வைத்தியசாலையில் உள்ள மான் குட்டிகளுடன் விளையாடி வருவதைப் படத்தில் காணலாம்.

# ராஜீவ் கொலை தொடர்பான மனுவை ஏற்றது நீதிமன்றம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை குறித்து இதுவரை விசாரிக்கப்படாத பல்வேறு கோணங்களில் தீர ஆராய வேண்டும் எனக்கோரி ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குதண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன் வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

அம்மனுவினை விசாரணைக்கு ஏற்று சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் மத்திய புலனாய்வுத்துறையின் பல்நோக்கு கண்காணிப்புக் குழுவிற்கு அழைப்பாணை அனுப்புமாறு நேற்று வியாழனன்று உத்திரவிட்டது.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் பேரறிவாளன் உட்பட மூவர் தூக்கு தண்டனை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

இந்நிலையில் தற்போது வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பேரறிவாளன், நீதிபதி ஜெயின் கமிஷனின் பரிந்துரைகளைப் பரிசீலித்து மேல் நடவடிக்கை எடுக்கவென அமைக்கப்பட்ட பல்நோக்கு கண்காணிப்புக் குழு அவ்வாறு விசாரணை நடத்தவில்லை.

மேலும் கொலை தொடர்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட மூவர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து தனியே வழக்கு நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அவ்வழக்கிலும் முன்னேற்றமெதுவுமில்லை.

ஆனால் இரு தளங்களிலும் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டால் தன் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் எவ்வளவு நம்பகமானவை என்பது தெரியவரும். எனவே அவ்வாறு மத்திய புலனாய்வுத்துறையின் கண்காணிப்புக் குழு அனைத்து கோணங்களிலும் விசாரிக்கவேண்டுமென மனு தாக்கல் செய்திருக்கிறார்.

அதன் மீது விளக்கம் அளிக்கும்படி நீதிபதி வணாங்காமுடி மத்திய புலனாய்வுத் துறைக்கு நோட்டீஸ் அனுப்ப உத்திரவிட்டார்.

(செ-11)

# தேர்தல் ஆணையாளர் யாழிற்கு திடீர் வருகை

(யாழ்ப்பாணம்)

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்றைய தினம் யாழ்பபாணத்திற்கு திடீரென வருகை தந்துள்ளார்.

யாழிற்கு வருகை தந்த ஆணையாளர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று பிற்பகல் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் யாழ்.மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் அர்சதன் உட்பட தேர்தல் திணைக்கள அதிகாரிகளுடன் சந்திப்பொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இச்சந்திப்பின்போது தேர்தலின் முன்



னேற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டதோடு வாக்களிக்கும் நிலையங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. (செ-4)

# கொழும்பில் கடத்தப்பட்ட யாழ்.மாணவன் மீட்பு

யாழ்ப்பாணம் நெல்லியடியை சேர்ந்த மாணவர் ஒருவர் கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மாணவரும் மீட்கப்பட்டுள்ளார் என மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் நெல்லியடியை சேர்ந்த மாணவர் ஒருவர் கனடா நாட்டுக்கு செல்வதற்கான விசா பெற கொழும்பு சென்றிருந்தார்.

சந்தேக நபர்கள் அந்த மாணவருக்கு கல்கிஸ்சை பகுதியில் வைத்து பியருடன் போதைப் பொருள் ஒன்றை கலந்து அதனை குடிக்க கொடுத்து நினைவிழந்த பின்னர் அவரை கஹாத்துடுவ வெனிவெல்கொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு கடத்திக் கொண்டு சென்றுள்ளனர்.

வீட்டுக்கு கொண்டு சென்ற மாணவருக்கு நினைவு தெளிந்த பிறகு சந்தேக நபர்கள் அவரிடம் இருந்து அவரது வீட்டின் தொலைபேசி இலக்கத்தை பெற்று வீட்டாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மாணவரை விடுவிக்க 20 இலட்சம் ரூபா கப்பம் கேட்டுள்ளனர்.

இது பற்றி பொலிஸாரிடம் முறைப்பாடு கிடைத்ததை அடுத்து, மாணவரின் குடும்பத்தாரிடம் பேசப்பட்ட தொகையில் இருந்து 50 ஆயிரம் ரூபாவை பெற்று கொண்டதாக கூறப்படும் இரண்டு பேரை மிரிஹான பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கை, கால்கள் கட்டப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட மாணவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் பாதாள உலக குழுவைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ள பொலிஸார் மேலும் சில சந்தேக நபர்களை தேடும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

(செ-11)

திருமலை மாணவர் படுகொலை

# மன்னிப்புச் சபை பிரதிநிதிகள் ஜெனிவா பயணிக்கவுள்ளனர்

திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை பார்வையிடுவதற்காக சர்வதேச மன்னிப்புச் சபையின் உயர் மட்டப் பிரதிநிதிகள் குழு இந்த வாரம் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவிற்கு விஜயம் செய்ய உள்ளது.

படுகொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரனும் மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளுடன் செல்லவுள்ளார்.

அதேவேளை மாணவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை தீர்வு காணப்படவில்லை எனவும் இலங்கை பாதுகாப்பு தரப்பினர் இந்த கொலைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் எனவும் மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

தனது மகன் கொலை செய்யப்பட்ட நாளில் இருந்து மருத்துவர் மனோகரன் கொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என குரல் எழுப்பி வருகிறார்.

இந்த நிலையில் அவர் அவரது குடும்பத்தினருடன் இலங்கையில் இருந்து வெளியேறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்நிலையில் மனோகரன் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் 50 ஆயிரம் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஒன்றை மனோகரன் மனித உரிமை ஆணைக்குழுவில் கையளிக்க உள்ளார்.

(செ-11)

# குறுஞ்செய்தி மூலம் தேர்தல் பிரசாரம்

நாளை 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கின்ற மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் போட்டியிடும் சில வேட்பாளர்கள் அவர்களின் ஆதரவிற்காக குறுஞ்செய்திகள் (எஸ்.எம்.எஸ்) மூலமாக பிரசாரம் செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தான் போட்டியிடும் கட்சி, சின்னம் மற்றும் விருப்பு இலக்கங்களை குறுஞ்செய்திகள் மூலமாக அனுப்பியே பிரசாரங்களில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் திணைக்களத்தின் அறிவித்தலின் பிரகாரம் வடக்கு, வடமேல் மற்றும் மத்திய ஆகிய மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கை 18 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

# பொதுநலவாய மாநாடு குறித்து இந்தியா முடிவு செய்யவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் எந்த மட்டத்தில் பங்கெடுப்பது என்பது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாக உரிய நேரத்தில் இந்தியா முடிவை எடுக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையத் அக்பருடீன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக நிச்சயமாக உரிய முடிவுவை இந்தியா எடுக்கும். ஏற்பாட்டாளர்கள் உட்பட சகல விடயங்களையும் பிரதிபலிப்பதாக அது அமையும். உரிய தருணத்தில் இது பற்றி அறிவிக்கப்படும். எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டப்பட்டுள்ள நிலையில் இந்தியா அங்கு நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

விழிநீர் சொரியும் அகவை பதின்மூன்று

மண்ணுலகில்
24-10-1934



விண்ணுலகில்
20-09-2000

அமரர் வேலன் பசுபதி
(காங்கேசன்துறை வைத்தியசாலை ஊழியர்)

சொர்க்கலோகத்தில் வாழும் எமதன்புப் பப்பாவே!
உங்கள் உருவத்தை எங்கள் இதயத்தில்
பதித்து வைக்கவில்லை செதுக்கி வைத்துள்ளோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை நிதம் நாடும்.

(4748)

நிரந்தர முகவரி : மாவிட்டபுரம், தெல்லிப்பளை. மனைவி, குடும்பத்தினர், மானிப்பாய்.

# இன்று ஒரு தகவல்

## முதல் வணக்கம்

கம்பர் ஒரு காவியம் எழுதினார்.

அது எவ்வளவு அழகானது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனாலும் அவர் எழுதியதை எடுத்துச் சொல்லும் விதம் இருக்கே அதுவும் ஒரு தனி அழகுதான்!

கம்பராமாயண சொற்பொழிவில் கேட்ட ஒரு விளக்கத்தைத் தான் நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

கம்பன் குறிப்பிட்டிருக்கும் ஒரு செய்தியை வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்று யூகித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இராமர்–சீதா கல்யாணம் முடிந்தவுடன் மணமேடையிலிருந்து இராமருடன் சீதாப்பிராட்டியும் எழுந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம். கூட்டத்திலிருந்தவர்களுக்கு ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வம்.

அதாவது சீதையை கல்யாணம் பண்ணிக் கொண்ட இராமர் யாரை முதலில் வணங்கப் போகிறார்? என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.

சீதை பின் தொடர இராமர் மண்டபத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். தூரத்தில் தசரதர் உட்கார்ந்திருந்தார். அந்தப் பக்கமாக இராமரும் சீதையும் போகிறார்கள்.

சரி... தசரதருக்குத்தான் முதல் நமஸ்காரம் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் அவரைத் தாண்டி அப்பால் செல்கிறார்கள்!

அடுத்ததாக இருந்தது கோசலை.

அதனால் தாயாரைத்தான் முதலில் வணங்க வேண்டும் என்று நினைக்கிறார் போல! என்று எல்லோரும் நினைத்தார்கள்.

ஆனால் இவர் தாயையும் தாண்டி அப்பால் போகிறார்.

அடுத்ததாக குலகுரு வசிஷ்டர் உட்கார்ந்திருக்கிறார்.

முதலில் குருவணக்கம்தான் என்று நினைக்கிறார் போல என்று நினைத்தார்கள். அதுவும் தப்பாக போய் விட்டது. இராமர் வசிஷ்டரையும் வணங்காமல் அப்பால் போகிறார்.

இதைப் பார்க்கிறார் விஸ்வாமித்திரர். கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் பெருமிதம்.

"அவர்களுக்கு கல்யாணம் பண்ணி வைத்ததே நாம் தானே! அதனால் நம்மிடம்தான் முதலில் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்று வருகிறார்கள் போல" என்று நினைத்தார் விஸ்வாமித்திரர்.

ஆனால் அவரும் ஏமாந்து விட்டார். அவரையும் தாண்டிப் போய்க் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

சரி.. அப்படியானால் யாரைத்தான் அவர்கள் முதலில் வணங்கப் போகிறார்கள்?

தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். இருவரும் போய் அவரது காலில்தான் விழுந்து வணங்கினார்கள்.

யார் அந்த அம்மா?

அவர் தான் கைகேயி! இராமரின் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருந்தவர்.

கம்பர் தன்னுடைய இராமாயணத்தில் இராமர் கைகேயியை வணங்கியதை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளார்.

அதை மட்டும் வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை அழகுபடக்கூறி அதற்கு ஒரு அர்த்தமும் சொல்லியிருக்கிறார் அந்தப் பேச்சாளர்.

இந்த நிகழ்வு, இராமர் கைகேயியைப் பார்த்து இப்படிச் சொன்னது மாதிரி இருந்ததாம்!

"என் அவதாரத்தின் இரகசியம் உனக்குத் தெரியும்! சீதையை இராவணனிடமிருந்து மீட்கப் போகவேண்டும். அதைக் காரணமாக வைத்து இராவணவதம் நடக்க வேண்டும். அதனால் என் பங்கை நான் செய்து முடித்து விட்டேன். சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன். இனிமேல் உன் பங்கை நீ செய்ய வேண்டும்! எங்களை காட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதற்குத் தான் உனக்கு முதல் வணக்கம்!'' என்று சொன்னது மாதிரி இருந்ததாம்.

எழுதிய ஒரு விடயத்தை எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார் பார்த்தீர்களா?

எனக்குத் தெரிந்த இரண்டு நண்பர்கள் இருந்தார்கள்.

இருவரும் ஒரே அறையில் தங்கி சொந்தமாகச் சமைத்து சாப்பிட்டுக் கொண்டு இருப்பவர்கள்.

அதில் ஒருவனுக்கு சமையல் தெரியும். இன்னொருவனுக்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டது. அவனைப் பார்த்து இவன் "ஏன்டா... உனக்கு கல்யாணம் முடிந்தவுடன் யாருக்கு முதல் நமஸ்காரம்?" என்றான்.

"முதல் நமஸ்காரம் உனக்குத் தான்டா!" என்றான் மற்றவன்.

"ஏன் அப்படி சொல்கிறாய்?'' என்று கேட்டான் அவன்.

"நீ சமைத்ததை கொஞ்ச நாளாகவே சாப்பிட்டதால்தான் சீக்கிரமாகவே கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும்'' என்று தோன்றியது.

"இந்த கல்யாணத்துக்கு காரணகர்த்தாவே நீதான். அதனால் உனக்குத்தான் முதல் மரியாதை!'' என்றான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வி.சகாதேவன் தேர்தலுக்கு முன்னர் சில கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் கந்தன் ஆலயத்தில் உண்ணாவிரதத்தில் நேற்றைய தினம் ஈடுபட்டுள்ளார்.

இவ் உண்ணாவிரதம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களைப் போல் வாக்களிக்காமல் விட்டுவிடுவதும் குறைந்த எண்ணிக்கையான தமிழ் மக்கள் மட்டும் சென்று வாக்களிப்பதும் கூட பிழையான தலைமைத்துவங்களை உருவாக்க ஏதுவாக அமைந்து விடும் என்பதால்,

வடக்கிலேயே வாக்குரிமை பெற்றுள்ள சகல மக்களும் தங்களுடைய வாக்குச்சீட்டினை இந்தத் தேர்தலில் ஒரு பலமான ஆயுதமாக நினைத்து பயன்படுத்த வேண்டும்.

அரசியல் போராட்டத்திற்கு ஒரு தொடக்கமாக இந்த தேர்தல் அமையப்போவதால் ஆயுத கலாசாரத்தில் மக்களைக் கொன்றவர்களையும் அரசியல்மூலம் மக்களை காட்டிக் கொடுத்தவர்களையும் இனங்கண்டு கொள்வதுடன் அவ் வாறானவர்களை வீடுகளிலிருந்து துரத்தியடித்து காட்டுக்கு அனுப்ப வேண்டும்.

ஜனநாயகத்தை உருவாக்கு வதற்கு தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை சமூக விரோத சக்திகள் குழப்பி விடாது இறைவனின் ஆசீர்வாதத்தை நான் கேட்டுக் கொள்வதுடன் இவ்வாறான தீய சக்திகள் தொடர்பாக தமிழ்மக்கள் விழிப்புடன் இருந்து தேர்தல் தொடர்பான வன்முறைகள் எதுவும் ஏற்பட்டு விடாமல் இருக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது மக்களுக்கு, எமது தமிழ் சமூகத்துக்கு ஒரு நன்மையான, திடமான, கௌரவமான, சுபீட்சமான, வளமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நேற்றும் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் நீரருந்தாமல், உணவருந்தாமல் யாருடனும் எவ்வித விவாதங்களிலும் ஈடுபடாமல் மௌனமாக எமது தமிழ் மக்களின் விடிவுக்காக இந்த மௌன உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ் உண்ணாவிரதப் போராட்டம் தேர்தல் பிரசாரமாக கருதப்படும் எனவும் அதனை இடைநிறுத்தவுள்ளதாகவும் யாழ். மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் அச்சுதன் தெரிவித்தார்.

மேலும் இவ் உண்ணா விரதத்திற்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளது என பவ்ரல் தெரிவித்துள்ளது. (அ-4)

# கடந்த ஆண்டு 784 குடும்பங்களுக்கு வீடமைப்பு கடன் வழங்கப்பட்டன

## தே.வீ.அ.சபை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தினரால் அமுல்படுத்தப்பட்டுள்ள பத்து இலட்சம் வீடுகளுக்கான வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி கடந்த வருடம் 784 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் அமைப்பதற்கும் இருக்கும் வீட்டை புனரமைத்து தரம் உயர்த்துவதற்கும் 179.81 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதில் வீடமைப்பு கடன் திட்டத்தினூடாக 233 அரச உத்தியோகத்தர் குடும்பங்களுக்கு 96.500 மில்லியன் ரூபாவும் வருமானம் குறைந்த 389 குடும்பங்களுக்கு 43.96 மில்லியன் ரூபாவும் புனர்வாழ்வு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 162 குடும்பங்களுக்கு 39.350 மில்லியன் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வருடம் இதுவரையிலும் வருமானம் குறைந்த 32 குடும்பங்களுக்கு 2.335 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர் குடும்பங்களில் இதுவரையில் 126 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, எதிர்வரும் வாரங்களில் முதல் கட்ட கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இரண்டு குடும்பங்கள் வீடமைப்பு மானியத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் மு.ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 80 |
| தக்காளி | 120 | 90 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 60 | 70 | 80 |
| கரட் | 60 | 80 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 100-120 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 90 |
| பாகற்காய் | 120 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 10 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 40 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 140 |
| போஞ்சி | 120 | 80 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 25 | 20 |
| தேசிக்காய் | 450 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 70 | 160 |

# இராசி பலன்

20.09.2013
(புரட்டாதி 04, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
பிரதமை பிற்பகல் 4.46 மணி வரை
உத்தரட்டாதி முன்னிரவு 7.28 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
மாளயபட்ச ஆரம்பம்
சித்தாமிர்தம்

**மேடம்** – வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** – செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடி கொள்ளும், உறவினர் வருகையுண்டு.

**மிதுனம்** – மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்பட்டு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** – மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்துமுடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**சிங்கம்** – வழிபாட்டில் ஆனந்தம் காண வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் மனக்கசப்புக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, போசன சுகமுண்டு.

**கன்னி** – உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், குதூகலப் பயணங்கள்இடம்பெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, திருமண முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** – நன்மைகள் நடைபெறும் நாள், விருந்தினர் வருகையுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலம் சீராகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** – சொல்லைச் செயலாக்கி காட்டுவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பிள்ளைகளின் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம்.

**தனுசு** – பெற்றோர் மீது பிரியம் கூடும்,சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், நண்பர்களால் உவியுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** – கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** – கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும்.

**மீனம்** – பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், போசன சுகமுண்டு.

வளவன்

# இந்திய மீனவர்கள் 19 பேர் காரைநகர் கடலில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 19 பேர் காரைநகர் கடற்படையின ரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


தமிழ் நாட்டின் புதுக்கோட்டை ஜனதா பட் டினத்தைச் சேர்ந்த 19 மீனவர்களே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு காரை நகர் கடற்பரப்பில் வைத்தே இந்த 19 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐந்து படகுகளில் புதுக்கோட்டையிலிருந்து கடற்றொழிலுக்கும் சென்ற இவர்கள் அனை வரும் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து காரை நகர் கடற்பரப்பிற்குள் மீன்பிடித்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அனுமதியின்றி அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு இவர்கள் அனைவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)



# எமக்கு தரப்பட்ட வரையறைக்குள் நின்றே அறிக்கையிட முடியும்

## இந்தியாவின் முன்னாள் தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு மாகாண சபைத் தேர்தல் முறையற்றதாக இடம்பெறினும் எங்களது அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து நாம் எதனையும் துணிந்து கூறமுடியாது; எமக்கு கொடுக்கப்பட்ட வரையறைக் குள்ளிருந்தே நாம் செயலாற்றவும் அறிக்கையிடவும் முடியும் என சர்வதேச கண்காணிப்புக் குழுவின் தலைவரும் இந்தியாவின் முன்னாள் தேர்தல்கள் திணைக்கள தலைமை ஆணையாளரும் உள்துறைச் செயலாளருமான கோபாலசுவாமி தெரிவித்துள்ளார்.**

யாழ். ரில்ஹோ விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் கண்காணிப்பாளர்கள் வெளி நாட்டிலிருந்து வராதிருந்தால் இங்கு தேர்தல் சம்பந்தமாக என்ன நடந்தது என்பதை இங் குள்ளவர்கள் ஊடாகவே நாம் அறிந்து கொள்ள முடிந்திருக்கும்.

ஆனால், நேரடியாக அவர்கள் வந்துள்ள மையால் அவர்களின் அறிக்கையில் ஒரு மாற்றம் ஏற்படும்.

அத்தோடு நியாயமான முறையில் தேர் தல் நடக்கும் என்ற நம்பிக்கை உண்டு. தவ றாக தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்ற காரணத்தால் தான் வெளியிலிருந்து கண் காணிப்பாளர்கள் வருவதற்கும் அவர்கள் வந் தாலும் தாங்கள் சட்டப்படியேதான் தேர்தலை நடத்துவோம் என்ற நம்பிக்கையிலும்தான் சர்வதேச கண்காணிப்பாளர்களை இங்கு வருவதற்கு தேர்தல் திணைக்களம் அனுமதித் துள்ளது.

மேலும் பிரச்சினை இல்லாது எங்கும் தேர்தல் நடந்ததில்லை. பிரச்சினைகள் இருக் கத்தான் செய்யும்.

முறையற்றபடி தேர்தல் நடக்குமாயின் எமது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது தொடர்பாக எங்களால் துணிந்து கூறமுடி யாது.

எங்களுக்கு கொடுக்கப்பட்ட வரையறைக் குள் இருந்தே நாம் செயலாற்றவும் அறிக்கை யிடவும் முடியும் என அவர் மேலும் தெரிவித் தார். (அ-4-6)

# சிறுவர் நாடகப் போட்டி முடிபுகள் வருமாறு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை களிடையே நடத்தப்பட்ட சிறுவர் நாடகப் போட்டியில் முதல் மூன்றிடங்களைப் பெற்ற வர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள் ளன.

இதற்கமைய கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை, சாவகச்சேரி மக ளிர் கல்லூரி, மட்டுவில் தெற்கு அ.த.க. பாடசாலை ஆகியன முறையே முதல் மூன்றிடங்களையும் பெற் றுள்ளன. (அ-9-29)

# 38 இலட்சம் ரூபா செலவில் பொதுநோக்கு மண்டபம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை கலையொளி சன சமூக நிலையத்தினருக்காக பொதுநோக்கு மண்டபமொன்று அமைக்கப்பட்டு வருகின் றது.

யு.என்.டி.பி.நிறுவனத்தினரால் வழங்கப் பட்ட 38 இலட்சம் ரூபா நிதியில் நிர்மாணிக் கப்பட்டு வரும் இப்பொதுநோக்கு மண்டபம், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டு சனசமூக நிலையத் தினரிடம் உத்தியோக பூர்வமாக கையளிக் கப்படவுள்ளது. (அ-9-18)

# பூட்டு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாணாக சபை தேர்தலில் சுயேட் சைக்குழுவில் போட்டியிடும் இரு வேட்பாளர் கள் இனந் தெரியாத நபர்களால் தாக்கப்பட் டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின் போது இரு வேட்பாளர் களும் பயணம் செய்த முச்சக்கர வண்டியும் தாக்குதலை மேற்கொண்ட நபர்களால் எரி யூட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பூட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பா ளர்கள் இருவர் நேற்றிரவு வேலணை மண் கும்பான் பகுதியில் இறுதித்தேர்தல் பிர சாரத்தை மேற்கொண்டுவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துள்ளனர்.

இதன்போது பண்ணைப்பாலத்தில் கூரிய ஆயுதங்களுடன் மறைந்திருந்த இனந்தெரி யாத நபர்கள் முச்சக்கரவண்டியை வழி மறித்து தாக்கியுள்ளனர்.

முச்சக்கரவண்டியை தாக்கத் தொடங்கிய போது நிலைமையை சுதாகரித்துக் கொண்ட முச்சக் கரவண்டி சாரதி அவ்விடத்தை விட்டு விலகியோடியுள்ளார்.

அப்போது முச்சக்கரவண்டிக்குள் இருந்த இரு வேட்பாளர் மீதும் உருட்டுக்கட்டைகள், வாள்கள் என்பவற்றைப் பயன்படுத்தி தாக்கு தல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின் போது சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த முச்சக்கரவண்டியை யும் பெற்றோல் ஊற்றி எரித்துள்ளனர்.

இத்தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் படகு ஒன்றின் மூலம் பண்ணை கடற்பரப் பினூடாக தப்பிச் சென்றதாக சம்பவத்தை நேரில் கண்ட ஆட்டோ சாரதி தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்.மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட் டதை தொடர்ந்து அங்கு வந்த அவர் நிலை மைகளை ஆராய்ந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தோடு, எரியூட்டப்பட்ட முச்சக்கர வண்டியும் யாழ். பொலிஸ் நிலையத்தில் நிறுத்திவைக் கப்பட்டுள்ளது. (அ-4)

# நுகாவில் வயல் பகுதிக்கு வாய்க்கால் அமைக்குக

(கரணவாய்)

கரவெட்டி நுகாவில் வயல் பகுதியில் அமைந் துள்ள வாய்க்காலுக்கு பதிலாக மற்றுமொரு வாய்க்கால் அமைக்கப்பட வேண்டிய நிலை யில், இதுவரை அக் கால்வாய் அமைக்கப் படவில்லை என விவசாயிகள் விசனம் தெரி வித்துள்ளனர்.

மேற்படி வயல் பகுதியில் அமைந்துள்ள வாய்க்காலினூடாக நெல்லியடி இராஜ கிராமம் போன்ற கிராமங்களின் நீர் வழிந்தோடு கின்றது.

இவ்வாறான நிலையில் மழை காலங் களில் மழை நீர் வழிந்தோடி வயல் நிலங்க ளுக்குள் செல்வதனால் நெற்செய்கை பாதிப் படைவதாக விவசாயிகள் சுட்டிக் காட்டியி ருந்தனர்.

இதனையடுத்து, மழை நீர் வழிந்தோடக் கூடியவாறு மற்றுமொரு வாய்க்கால் அமைத் துத் தருவதாக உறுதியளிக்கப்பட்டு, இடங்க ளும் பார்வையிடப்பட்டன.

எனினும் இதுவரை அவ் வாய்க் கால்கள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

மழை காலம் நெருங்குவதனால் துரித கதியில் வாய்க்காலை அமைத்துத் தருமாறு விவசாயிகள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)

# காசோலை மோசடி; இருவர் கைதாகினர்

காசோலை மோசடி தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் இரண்டு கோடி ரூபாவிற்கும் அதிக மான தொகையை மோசடி செய்ததாக கூறப் படும் இருவர் அநுராதபுரம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் காசோலைகள் மூலம் பணமோசடியில் ஈடுபட்டிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்கள் அநுராதபுரம் பகுதியில் மருந்தகம் ஒன்றை நடத்தி வருவ தாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள் ளது. இந்த சந்தேக நபர்கள் மருந்துக் கொள் வனவில் ஈடுபட்டிருப்பதுடன் அதற்கான பண த்தை செலுத்தாமல் இருந்து வந்ததாக பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# மத்திய மாகாணத்திற்கு பிளாஸ்ரிக் வாக்கு பெட்டி

(கொழும்பு)

மூன்று மாகாண சபைத் தேர்தலில் மத் திய மாகாண தேர்தலில் பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டி பயன்படுத்தப்படவிருப்பதாக மாத் தளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ஹேலன் மீஹஸ்முல்ல தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரியவின் ஆலோசனைக்கு அமையவே பிளாஸ்டிக் வூக்குப் பெட்டி பயன்படுத்தப்பட விருக்கின்றது.

தேர்தலில் பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டி பயன்படுத்தப்படுவது இதுவே முதன்முறை யாகும்.

மாத்தனை மாவட்டத்தில் மாத்தளை நகர சபை அதிகாரத்திற்குட்பட்ட வாக்களிப்பு நிலையங்களிலேயே இந்த வாக்கு பெட்டி பயன்படுத்தப்படவுள்ளன. (அ-2)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களின் திருக்குறள் மனன போட்டி முடிவு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு கோட்டத்திற்குட்பட்ட ஆரம் பக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டி மற் றும் துரித கணிதச்செய்கைப் போட்டிக ளின் முடி புகள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜி.எஸ். பரமேஸ்வரனால் வெளியிடப்பட்டுள் ளன.

இதன்படி இப்போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர் விபரம் வருமாறு,

**திருக்குறள் மனனப் போட்டி**

**தரம் 1**

கோ. கேளரசி (மு/ கோம்பாவில் விக் னேஸ்வரா வித்தி), ம.இன்பராஜ் (மு/ இர ணைப்பாலை றோ.க.ம.வித்தி, அ.டன்சியா (மு/ஸ்ரீசுப்பிரமயணிய வித்தி,

**தரம் 2**

ம.கோபினா (மு/கோம்பாவில் விக்னேஸ் வரா வித்தி), த. கிபன்சிகா (மு/ஸ்ரீசுப்பிரம ணிய வித்தி), பு. அபிசாஜினி (மு/ இரணைப் பாலை றோ.க.ம.வித்தி),

**தரம் 3**

ர.கயானா (மு/உடையார் கட்டு அ.த.க. பாடசாலை), பா.றொபின்சனா (மு/ நெத்தலி யாறு த.வித்தி, இ. ரதுஷா (மு/ஸ்ரீ சுப்பிரம ணிய வித்தி),

**தரம் 4**

ர.அர்ச்சனா (மு/ஸ்ரீசுப்பிரமயணிய வித்தி, சி. ரிலக்ஷி (மு/ கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தி), சு.வேணுஜா (மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி,

**தரம் 5**

ப.பிரவீனா (மு/ஸ்ரீ சுப்பிரமயணிய வித்தி, அ.டொமினிசா (மு/ கோம்பாவில் விக்னேஸ் வரா வித்தி, இ.ஜெயமாலினி (மு/உடையார் கட்டு அ.த.க.பாடசாலை),

**துரித கணிதச் செய்கைப் போட்டி**

**தரம் 2**

ச.தாயுதா (மு/ நெத்தலியாறு த.வித்தி), தூ.சாதுரிஜா (மு/ஸ்ரீசுப்பிரமயணிய வித்தி), பு.திசாகரன் (மு/உடையார்கட்டு அ.த.க. பாடசாலை),

**தரம் 3**

கி.லதுர்ஷன் (மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை ), சி.அபிதா (மு/உடையார்கட்டு அ.த.க.பாடசாலை), அ.டனுசாயினி (மு/ இரணைப்பாலை றோ.க.ம.வித்தி,

**தரம் 4**

பி.நிலாப்பிரியன் (மு/உடையார்கட்டு அ.த.க.பாடசாலை), ர.அர்ச்சனா (மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி), ச.தமிழ்நிலா (மு/தேரா வில் த.வித்தி

**தரம் 5**

க.மஹிந்தன் (மு/நெத்தலியாறு த.வித்தி, து.புருசோத்துமன் (மு/ கோம்பாவில் விக் னேஸ்வரா வித்தி, க.டிலக்ஷிகா (மு/விசு வநாதர் ஆரம்பப் பாடசாலை) (அ)

# புதையல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் கைது

(கொழும்பு)

லாகூகல காட்டுப்பகுதியில் புதையல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொத்து வில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவ ளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

லாகூகல காட்டுப்பகுதிக்குள் சந்தேக நபர்கள் சட்ட விரோதமாக நுழைந்துள்ளனர். பொத்துவில், அம்பாறை, புத்தல, வடினாகல மற்றும் மெனிக்திவெல பகுதிகளைச் சேர்ந்த வர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளனர்.

அகழ்விற்கு பயன்படுத்திய வெடிபொருட் கள், டெட்டனேடர் உள்ளிட்ட பல பொருட்கள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை தொல்பொருட்களை தேடி கஹடகஸ்திகிலிய , உபுலுதெனிய பகுதி யில் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிலையில் கைதான நான்கு சந்தேக நபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ள்ளனர்.

இவர்களுள் பெண் ஒருவரும் அடங்கு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி வரை சந்தேக நபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# 21 ஆம் திகதி அனைவரும் வாக்களிக்க வேண்டும் இந்து மாமன்றம் கோரிக்கை

வடமாகாணம், மத்திய மாகாணம், வட மேல் மாகாணம் ஆகிய மூன்று மாகாணங் களுக்கான மாகாண சபை தேர்தல் எதிர்வ ரும் 21 ஆம் திகதி நடைபெறுகின்றது. ஜனநாயக அடிப்படையில் எம் உரிமைகளைப் பேண வாக்கு ஓர் ஆயுதமாகும்.

அதனை எவரும் பாவிக்காது விடுவது கடமை தவறுவதாகும். எனவே சனிக்கிழமை காலையில் தமக்குரியதான எமது மக்கள் ஒவ்வொருவரும் முதற் கடமையாக வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்க வேண்டும் என அன்பாக அனைவரையும் வேண்டு கின்றோம் என அகில இலங்கை இந்து மாம ன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலும் உங்கள் வாக்கினை வேறு எவ ரும் துஷ்பிர யோகம் செய்யாதவாறு சனிக்கி ழமை அதிகா லையிலேயே வாக்களிப்பது வரவேற்கத்தக்கது.

உங்களின் வாக்குகளின் மூலம் மாகாண சபைகளை ஆட்சி செய்வதற்கு பொருத்த மானவர்களை தெரிவு செய்கின்ற உரி மையை நாம் விட்டுக் கொடுக்கக் கூடாது. மேலும் அது ஒரு கடமையும் கூட. எனவே அக்கடமையிலி ருந்தும் தவறக் கூடாது என கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

**காணி விற்பனை**

புன்னாலைக் கட்டுவான்
திடல்புடத்தில் கடையுடன்
சேர்ந்த 2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0778247330

(3970)

# யோகாசன பயிற்சி

யாழ்ப்பாணம் ஓம் பதஞ்சலி யோககேந்திர நிலையத்தால் நடத்தப்படும் உடல், உள, ஆரோ க்கியத்திற்கான யோகாசனம் மற்றும் தளர்வுப் பயிற்சிக்குமான புதிய பிரிவுகள் இன்று வெள் ளிக்கிழமை முற் பகல் 6 மணிமுதல் ஆரம் பமாகவுள்ளன.

இப்பயிற்சி வகுப் புக்கள் தினசரி சனி, ஞாயிறு தினங்களில் முற்பகல் 6.15 மணி முதல் 7.15 மணி வரை நடைபெறும் என தெரிவிகக்ப்பட் டுள்ளது.

இதில் வயது, மத வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலா ரும் கலந்து கொள்ள முடி யும் எனவும் குறிப்பிட ப்பட்டுள்ளது. (அ-5)

நீங்கள் பீனிசம். பீனிச வாய்வு. இளநரை. தலையிடி. தலைப்பாரம். மூக்கினால் இரத்தம் வடிதல். காதடைப்பு. கண் மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

**இதோ பாவியுங்கள்**

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால் பொன்னாங்காணி தைலம் வாங்கும்போது வர்ண மூடியில் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் ஒறிஜினல் என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

Manufactured by:
**Sithara Products**
Puttalam Road, Chilaw
(Reg.No: 63 82)
AR/PR/No 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2567

(சி/3731)

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா :42<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: College ஆசிரியர்<br>தொ.இ:B2310 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா :63.25 செவ் 4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கணிய அளவையாளர், பட வரைஞர்<br>தொ.இ:G2305 |
| பிறப்பு: 1980 இந்து (KO)<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 37.5 செவ். 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: College, BSc ஆசிரியர்<br>தொ.இ:B2311 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா :36 செவ். 12<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L கடை<br>தொ.இ:G2307 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: செவ். 7<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L வாகன திருத்துநர் (சொந்தம்)<br>தொ.இ:B2313 | பிறப்பு: 1983 இந்து (சைவகுருக்கள்)<br>நட்சத்திரம்:சுவாதி 4<br>கி.பா :52.25<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர்<br>சைவ போசன வேளாளரும் ஏற்கலாம்.<br>தொ.இ:G2312 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா :28.5 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L கடை (சொந்தம்)<br>தொ.இ:B2315 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா : 47 செவ். 1<br>தகைமை/தொழில்: MBBS China Internship<br>தொ.இ:G2317 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பது எப்படி?

- முதலில் உங்களுக்கு விருப்பமான அல்லது நீங்கள் ஆதரிக்கும் ஒரு கட்சியை அல்லது ஒரு சுயேட்சைக் குழுவைத் தெரிவு செய்து அதன் சின்னத்திற்கு எதிரே புள்ளடியிட (X) வேண்டும்.
- பின்னர் உங்களுக்கு இருக்கும் மூன்று விருப்புவாக்குகளை ஒருவருக்கு ஒன்று என்ற வீதம் மூன்று வேட்பாளர்களுக்கு வழங்கலாம்.
- வேட்பாளர்களுக்கென குறித்தொதுக்கப்பட்ட இலக்கத்தின் மேல் புள்ளடி (X) இட்டு உங்கள் விருப்பு வாக்கை வழங்கலாம்.
- சின்னத்திற்கு எதிரே புள்ளடியிடும் போது இடப்படும் புள்ளடி பெட்டியின் கோடுகளில் தொடாதவாறு இடப்படுதல் அவசியம்.
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சியின் சின்னங்களுக்கு புள்ளடியிடும் பட்சத்தில் அவ் வாக்குச் சீட்டு நிராகரிக்கப்படும்.
- வாக்களிக்கச் செல்லும் வாக்காளர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேசிய அடையாள அட்டையை வைத்திருத்தல் வேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாதவிடத்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், அரச ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் ஆள் அடையாள அட்டை, மதகுருமார் ஆள் அடையாள அட்டை என்பவற்றில் ஏதாவது ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.
- 2011 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது தேர்தல் திணைக்களத்தால் அல்லது ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை இருப்பின் அதனை உங்கள் கிராம அலுவலரிடம் ஒப்படைத்து 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிற்கிணங்க புதுப்பித்துக் கொள்வதன் மூலமும் ஒருவர் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.
- இதேவேளை வாக்காளர் அட்டை இதுவரையில் கிடைக்கப் பெறாதவர்கள் தமக்கான வாக்குச் சாவடிக்கு சென்று தேர்தல் இடாப்பில் தமது பெயர் இடம்பெற்றிருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியும்.

மாதிரி வாக்குச்சீட்டு (தமிழில்)

**மாகாணசபைத் தேர்தல் - 2013 - யாழ் மாவட்டம்**

| | | |
|---|---|---|
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | | |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | | |
| ஐக்கிய தேசியக் கட்சி | | |
| ஜனநாயக ஐக்கிய முன்னணி | | |
| ஐக்கிய சோசலிச கட்சி | | |
| மக்கள் விடுதலை முன்னணி | | |
| ஜனசெத பெரமுன | | |
| ஜனநாயகக் கட்சி | | |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | | |
| ஸ்ரீலங்கா மகஜன பக்ஷய | | |
| சோசலிச சமத்துவக் கட்சி | | |
| சுயேட்சைக் குழு - 1 | | |
| சுயேட்சைக் குழு - 2 | | |
| சுயேட்சைக் குழு - 3 | | |
| சுயேட்சைக் குழு - 4 | | |
| சுயேட்சைக் குழு - 5 | | |
| சுயேட்சைக்குழு - 6 | | |
| சுயேட்சைக் குழு - 7 | | |
| சுயேட்சைக் குழு - 8 | | |
| சுயேட்சைக் குழு - 9 | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

## நாட்டில் மேலதிக நெல் கையிருப்பில் உண்டு

(கொழும்பு)

இதுவரை 80 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை குறிப்பிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலேயே கூடுதலான அளவு நெல் கொள்வனவு இடம்பெற்றுள்ளதாக சபையின் தலைவர் ஜே.பீ.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட விவசாயிகள் சகலரினதும் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து அந்த மாவட்டத்திலுள்ள அனைத்து களஞ்சியசாலைகளும் நிரம்பிக் காணப்படுவதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இத்தகைய களஞ்சியசாலைகளில் வெற்றிடத்தை ஏற்படுத்துவதற்காக அங்கிருக்கும் நெல்லை அநுராதபுரத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது மேலதிக நெல் கையிருப்பில் உள்ளதாகவும் அவற்றை அரிசியாக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

## ஆயுத கொடுக்கல்-வாங்கல் மோசடியில் இலங்கைக்கு பதினான்காவது இடம்

ஆயுத கொடுக்கல்-வாங்கல்களின் போது மோசடி இடம்பெறும் மோசமான நாடுகளின் வரிசையில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது.

ட்ரான்பெரன்சி இன்டர்நஷனல் அமைப்பின் பிரித்தானிய கிளையினால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலம் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆயுதக் கொடுக்கல்-வாங்கல்களில் ஈடுபடும் மோசமான 14 நாடுகளின் வரிசையில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆயுத கொடுக்கல்-வாங்கல்களில் ஈடுபடும் பாதுகாப்பு அமைச்சுகளும் படைத்தரப்பும் இவ்வாறு மோசடிகளில் ஈடுபடுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலஞ்சம், தரகு போன்றவற்றின் அடிப்படையில் ஆயுதக் கொடுக்கல்-வாங்கல் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

82 நாடுகளில் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அல்ஜீரியா, அங்கோலா, கமரூன், கொங்கோ, எகிப்து, எரித்திரியா, ஈரான், சவுதி அரேபியா, கட்டார், சிரியா, யேமன் போன்ற நாடுகளிலும் ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களின் போது ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊழல் மோசடிகள் நடைபெறாத நாடுகளின் வரிசையில் அவுஸ்திரேலியா முன்னணி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பெண்மீது துஷ்பிரயோகம்; இலங்கை வீரருக்கு விசாரணை

(கொழும்பு)

ஹெய்ட்டியில் ஐ.நா. படையில் கடமையாற்றும் இலங்கை இராணுவ வீரர் ஒருவர் 18 வயது பெண்ணொருவரை பலாத்காரம் செய்தார் என்று சர்வதேச ஊடகங்கள் கூறியுள்ள குற்றச்சாட்டை இலங்கை இராணுவம் விசாரித்து வருகின்றது என்று இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

துஷ்பிரயோகம் இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையும் இதை விசாரித்து வருகின்ற போதிலும் தாம் தனியான விசாரணையொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த இராணுவவீரர் குற்றம் இழைத்தவராக காணப்படின் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரிக்க சென்ற நீதவான் சம்பவ நடந்த இடத்தில் பயன்படுத்தப்பட்ட ஆணுறையொன்றைக் கண்டுள்ளதாக தெரியவருகின்றது. இது தொடர்பிலும் சோதனைகள் நடத்தப்படுகின்றன. விசாரணை நடத்தப்பட்டு வருகின்ற குற்றஞ் சாட்டப்பட்டவர் ஹெய்ட்டி நாட்டின் இன்னொரு பகுதியிலுள்ள முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 860 படைவீரர்கள் ஹெட்டியில் ஐ.நா. சமாதானப் படையில் கடமை புரிகின்றனரென தெரியவருகின்றது. (அ-2)

## தேர்தல் வன்முறைகள் குறித்து 458 முறைப்பாடுகள் பதிவாகின

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் 458 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றில் 54முறைப்பாடுகள் தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புடையவை எனவும் அதிகளவிலான 119 முறைப்பாடுகள் குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் 75, கிளிநொச்சி மாவட்டத்தில் 18 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. பொதுவளங்களை அதிகளவில் பயன்படுத்துகின்றமை தொடர்பிலும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றில் அதிகளவிலான 94 முறைப்பாடுகள் தேர்தல் நடவடிக்கைகளில் அரச உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவது தொடர்பில் பதிவாகியுள்ளன.

அரச வாகனங்களை பயன்படுத்துவது தொடர்பில் 60 முறைப்பாடுகளும் பொருள் விநியோகம் தொடர்பில் 38 முறைப்பாடுகளும் தேர்தல் முறைப்பாட்டு பிரிவுக்கு கிடைத்துள்ளன.

இதேவேளை இதுவரையில் தேர்தலுடன் தொடர்புடைய 371 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய ஏற்பாட்டாளர் ரசாங்க ஹரிஸ்சந்திர குறிப்பிட்டார்.

தேர்தலுடன் தொடர்புடைய பிரசார நடவடிக்கைகள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 338 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, நபர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் 33 முறைப்பாடுகளும் வெளியாகியுள்ளன. (அ-2)

# வடக்கின் வசந்தம் வேலைத்திட்டங்களுக்கு மூவாயிரம் மில்லியன் டொலர் செலவானது

(கொழும்பு)

**வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம் 3 ஆயிரம் மில்லியன் டொலர் செலவில் முன்னெடுக்கப்பட்டிருப்பதுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வடக்கின் பங்களிப்பு 3.7 வீதமாக அதிக ரித்திருப்பதாக வடமாகாண மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான ஜனாதிபதி செயலணிக் குழுவின் செயலாளர் எஸ்.பி.திவாரட்ண தெரிவித்துள்ளார்.**

ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் வாராந்தம் இவ்வாறானதொரு ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தவிருப்பதாக இதில் கலந்து கொண்ட ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த திவாரட்ண,

அரசாங்கம் வடக்கை மீளக் கட்டியெழுப்ப வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் ஊடாக பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளது. எவ்வளவுதான் அபிவிருத்திகளை முன்னெடுத்தாலும் சர்வதேச சமூகத்தினர் சாதகமான பக்கத்தைப் பார்க்காமலிருப்பது துரதிர்ஷ்டவசமாகவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வடபகுதியில் ஆயிரத்து 417 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பில் 65 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு தவிர்ந்த ஏனைய நிலப்பரப்புக்களில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

வடமாகாணத்தின் சுகாதாரத்துறையில் யுத்தத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி,முல்லைத்தீவு வைத்தியசாலைகள் உட்பட அனைத்து வைத்தியசாலைகளும் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு முன்னர் இல்லாத வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் 5 ஆயிரத்து 348 படுக்கை வசதிகள் உள்ளன.

வடக்கில் ஆயிரத்து 20 பாடசாலைகளில் 982 பாடசாலைகள் முழுமையாக இயங்கி வருகின்றன. பாதிப்படைந்த பாடசாலைகள் பல வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு கல்விச் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அதேநேரம் வடமாகாணத்தில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் அரசாங்கத்தால் மாத்திரம் 27 ஆயிரத்து 392 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதனைவிட இராணுவத்தினர், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. நிறுவனங்களின் ஊடாக 4 ஆயிரத்து 995 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 46 ஆயிரத்து 923 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வீடில்லாத சகலருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கை எமது அரசாங்கத்திடம் மட்டுமே உள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் கூட இவ்வாறான கொள்கை இல்லை. இவற்றுக்கு மேலதிகமாக இந்திய உதவியுடன் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யுத்தம் காரணமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்தவர்கள் மின்சாரத்தை பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளனர். தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்திற்கு 40 வீதமும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 42 வீதமும் யாழ்ப்பாணத்துக்கு 84 வீதமும் வவுனியாவுக்கு 72 வீதமுமான மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கின் சில பகுதிகளிலுள்ளவர்கள் கூட தற்பொழுதே முதன்முறையாக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர்.

வடக்கில் 167 ஆயிரத்து 348 ஹெக்டேயர் நிலப்பரப்பில் விவசாயம் முன்னெடுக்கப்படுவதுடன் 2012-2013 காலப் பகுதியில் இங்கு 2 இலட்சத்து 25 ஆயிரத்து 720 மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மீன்பிடித்தடை நீக்கப்பட்டிருப்பதால் நாளாந்தம் 28 லொறிகளில் மீன்வகைகள் தென் பகுதிக்குக் கொண்டு வரப்படுகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகள், மாகாண வீதிகள் மற்றும் கிராமிய வீதிகள் என பல்வேறு மட்டங்களில் வீதி அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை வடக்கில் 25 பிரதான பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புகையிரத போக்குவரத்து நீண்ட காலத்தின் பின்னர் கிளிநொச்சி வரை வழமைக்குத் திரும்பியுள்ளது.

வடக்கில் 70 ஆயிரத்து 988 மில்லியன் பெறுமதியான முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் 29 முதலீடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார். (அ-2)

## பூங்காவை பாதுகாக்க பெற்றோருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிறார்களின் பொழுது போக்கிற்காகவும் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பதற்கும் பெருமளவு நிதியில் அமைக்கப்பட்டுள்ள பழைய சிறுவர் பூங்காவை சிறுவர்கள் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென யாழ். மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்படி குறித்த பூங்கா 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு ஏற்றவாறான விளையாட்டு வசதிகளைக் கொண்டிருப்பதனால் இவ்வயதிற்குட்பட்ட சிறுவர்களே இப்பூங்காவினை பயன்படுத்த முடியும் என மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

## இடமாற்ற கொள்கை தயாரிக்கப்படவுள்ளது

ஆசிரியர் மற்றும் அதிபர் இடமாற்றங்களை வழங்குவதற்கான உரிய முறைமையொன்றை தயாரித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு உரிய காலத்தில் இடமாற்றங்களும் சம்பள உயர்வுகளும் வழங்கப்படவில்லை என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயங்களை கருத்திற்கொண்டு எதிர்வரும் 6 மாதங்களுக்குள் உரியமுறையில் இடமாற்றம் வழங்கும் திட்டமொன்றை தயாரித்துள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வருடாந்தம் ஆசிரியர் மற்றும் அதிபர் சேவைகளுக்கான பரீட்சைகளுக்குரிய அட்டவணை ஒன்றையும் எதிர்காலத்தில் தயாரிக்கவுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கல்வி சேவையில் தற்போது தொழிற்சங்கங்களுடன் தோன்றியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர், தொழிற்சங்கங்கள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## தங்கம் கடத்திய இருவர் கைது

(கொழும்பு)

தங்கம் கடத்திய இரண்டு இலங்கையர்களை இந்திய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

3.6 கோடி ரூபா பெறுமதியான ஒரு கிலோகிராம் எடையுடைய பன்னிரண்டு தங்க பார்களைக் கடத்தியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் கோவா மாநில சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இந்த இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாயிலிருந்து இந்த தங்க பார்கள் கடத்தப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. மிகவும் நுட்பமான முறையிலேயே இத் தங்கம் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## இந்திய பழங்களை எடுத்துவரத் தடை

இந்தியாவிலிருந்து இலங்கை பயணிக்கும் பயணிகள் பழங்களை எடுத்து வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள விவசாயத் திணைக்கள உத்தரவாதக் கிளை இந்தத் தடையை விதித்துள்ளது.

பழங்களை அழிக்கும் ஒரு வகை ஈ இலங்கையில் பரவுவதை தடுக்கும் நோக்கிலேயே இந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. குறித்த வகையான ஈக்கள் ஏற்கனவே இந்தியாவில் பரவியுள்ளன.

உத்தரவாதச் சான்றுகள் இல்லாது பழங்களை எடுத்து வருவோர் மீது கட்டுநாயக்க விமான நிலையத்தில் 5 ஆயிரம் வரையில் அபராதம் விதிக்க சட்டத்தில் இடமுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## மில்கோ நிறுவனத்தினூடாக பால் வழங்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கான பால் விநியோகத்தினை சீர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் மில்கோ நிறுவனத்தின் ஊடாக பால் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாணவர்களுக்கு தேவையான பாலை பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆளுநரிடம் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டம் விரைவில் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (அ-5)

## தேர்தல் சட்டங்களை மீறிய 135 பேர் கைது

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறிய 135 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் 174 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய மாகாணத்திலேயே கூடுதலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸ் தேர்தல் நடவடிக்கைப் பிரிவுக்கு மத்திய மாகாணத்தில் இருந்து 75 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன் வடமாகாணத்தில் 58 முறைப்பாடுகளும் வடமேல் மாகாணத்தில் 41 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. (அ-2)

## தேர்தலுக்கும் படையினருக்கும் எவ்விதத் தொடர்புமில்லை

தேர்தலுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் எந்தத் தொடர்புமில்லை என இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனரே தவிர அவர்கள் தேர்தலில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்கேற்கவில்லை.

போருக்குப் பின்னர் வடக்கில் மீள்குடியேற்றப் பணிகள், மறுசீரமைப்புப் பணிகள், நிர்மாணப் பணிகள், புனர்வாழ்வுப் பணிகள் போன்ற நலன்புரி நடவடிக்கைகளிலேயே இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.


அவர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)



# சிறுவர் அரங்கம்

580

## தெனாலிராமன் விகடகவி ஆனது எப்படி?



"நான் ஒரு விகடகவி. தெனாலி கிராமம் மிகவும் சிறியது" - ராமன் தனக்குள் இவ்வாறாக நினைத்துக் கொண்டான். "மன்னர் கிருஷ்ண தேவராயர், கலைகளையும் படிப்பாளிகளையும் ஆதரிப்பவர். நான் அவரது விஜயநகர அரசவையில் சேர வேண்டும்" என எண்ணினான்.

எவ்வாறு அங்கு சென்று சேர்வது என ராமன் யோசித்தான்.

அப்போது, கிருஷ்ணதேவராயருக்கு குருவாக 'தாத்தாச்சாரியார்' என்பவர் இருந்தார். "நாம் தாத்தாச்சாரியாரைச் சந்திப்பதே சிறந்தது. அவரே ராஜகுரு. அவரது ஒரு வார்த்தை என்னை அரசவையில் சேர்ப்பதற்குப் போதுமானது", என ராமன் தீர்மானித்தான்.

அப்போது ராஜகுரு தாத்தாச்சாரியார் தெனாலியிலிருந்து சிறிது தொலைவில் உள்ள 'மங்களகிரி' என்ற ஊரில் தங்கியிருந்தார்.

ராமன் தனது கவிதைத் தொகுப்புகளை எடுத்துக் கொண்டு தாத்தாச்சாரியாரைக் காணச் சென்றான். அவரிடத்தில் கவிதைத் தொகுப்பை படித்துக் காண்பித்தான்.

"அருமை!" என்று தாத்தாச்சாரியார் ராமனின் கவிதைகளைக் கேட்டவாறு கூறினார். "நீ விஜயநகர அரசவையில் இருப்பதற்குத் தகுதியானவன்", என்றார் அவர்.

தனது வார்த்தைகளை அவ்வளவு முக்கியமாக ராமன் கருதுவான் என அவர் எண்ணவில்லை.

ராமனும், ராஜகுருவிடமிருந்து செய்தி வரும் என எண்ணி பல நாட்கள்



(1)

காத்திருந்தான். ஆனால், ஒரு பதிலும் அவனுக்கு வரவில்லை.

அதனால் அவன் தனது உடைமைகளை விற்றுவிட்டு. தெனாலியிலிருந்து தனது மனைவி, குழந்தை, வயதான தாய் ஆகியோருடன் விஜயநகரம் புறப்பட்டான்.

"ராஜகுரு என்னை நன்கு நினைவில் வைத்திருப்பார்" என ராமன் நினைத்தான்.

அவன் தனது குடும்பத்தை ஒரு விடுதியில் விட்டுவிட்டு தாத்தாச்சாரியாரைக் காண அவரது இல்லத்திற்குச் சென்றான்.

"நான் ராஜகுருவின் நண்பன், நாங்கள் பேசிக் கொண்டிருக்கையில் யாரையும் உள்ளே விட்டுவிடாதீர்கள்", என்று வாயிலில் இருந்த காவலர்களிடம் கூறினான் ராமன்.




தாத்தாச்சாரியார் ராமனைக் கண்டதும் அதிர்ச்சியுற்றார்.

"நான் இந்த முட்டாளைக் காண்பேன் என எதிர்பார்க்கவில்லை. இவனிடமிருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டும்" என தாத்தாச்சாரியார் எண்ணினார்.

அவர் பலமாகக் கத்த ஆரம்பித்தார். "என்ன தைரியம் இருந்தால் எனது வீட்டுக்குள் நுழைவாய்! உன்னைப் பார்த்தால் திருடன் போலுள்ளது! காவலர்களே! இவனைப் பிடித்து வெளியில் தூக்கியெறியுங்கள்!" என்றார்.

அவரது காவலர்கள் ஓடிவந்து தனது எஜமானர் கூறியதைச் செய்தனர். அவர்கள் ராமனைப் பிடித்து வெளியே இழுத்து



(2)

வந்து தெருவில் தள்ளினர்.

ராமன் தனது வேட்டியை துடைத்தவாறு எழுந்து நின்றான்.

"நான் இதை என்றும் மறக்கமாட்டேன், ராஜகுரு! உன்னை நான் பழிக்குப் பழி வாங்குவேன். பொறுத்திருந்து பார்!" எனக் கூறி அவன் தனது கையை கோபமாக ஆட்டியவாறு நடந்து சென்றான்.

ராமனுக்கு விரைவிலேயே அந்த வாய்ப்பு கிட்டியது. மறுநாள் அவன் கிருஷ்ணதேவராயரின் அரசவைக்குச் சென்றான்.

அங்கு ராஜகுரு தாத்தாச்சாரியார் மற்றும் பல பண்டிதர்கள் அரசவையில் அமர்ந்திருந்தனர். ஒரு மந்திரவாதி தனது வித்தைகளால் அரசவையைக் களிப்பூட்டிக் கொண்டிருந்தான்.



(3)

முடிவில் அவன் கிருஷ்ணதேவராயரை வணங்கி, "மன்னரே! எனது மந்திர தந்திரங்களுக்கு ஈடாக யாருமே இங்கோ அல்லது உங்கள் நாட்டிலோ செய்வது இல்லை", என்றான்.

கிருஷ்ணதேவராயருக்கு அவனது கர்வமான பேச்சு துளியும் பிடிக்கவில்லை.

"யாரேனும் என்னை மந்திரக்கலையில் வெல்பவர்கள் உள்ளனரா?" எனக் கேட்டான்.

யாரும் எழுந்திருக்கவில்லை. ராஜகுருவும் மௌனமாக இருந்தார். அவர் மந்திரவாதியின் சவாலை ஏற்க பயந்தார்.

தெனாலிராமன் முன் வந்தான்.

"நான் இந்த மந்திரவாதியை வெல்வேன், மன்னா", என்று அவன் நம்பிக்கையோடு கூறினான்.



(4)

(தொடரும்)

# கருந்தேள் ஆகி வந்த காகபுஜண்டர் மகரிஷி




ஆன்மீகம் 119

ஒருமுறை மகாலிங்கபுரத்தில் ஸ்ரீ ரமணி குருஜி ஸ்ரீகாகபுஜண்டர் மகரிஷியின் நாடி ஜோதிடமும் அருள் சக்தியின் வாக்கும் சொல்லுவதாகக் கூறினார்கள்.

எனது குரு தலையாட்டிச் சித்தர் ஸ்ரீலஸ்ரீகாகபுஜண்டர் மகரிஷியின் அவதாரம் என்று பல வருடங்களாகக் கூறுவதால், ஸ்ரீ ரமணி குருஜி அருள்வாக்கு ரகசியம்தான் என்ன என்று அறிய, முன்பின் ஸ்ரீரமணி சுவாமிகளைப் பார்த்திராத நான் அவரது ஆச்சிரமத்தில் போய் உட்கார்ந்திருந்தேன். மேலும், தினம் 300 பேர் சாப்பிடும் அன்னதானத்திற்கு இவரிடம் தருமம் செய்ய தூண்டிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அமர்ந்திருந்தேன்.

பொதுவாக மனிதன் கஷ்டம், துன்பம் வரும்போது யாராவது சாமியார்கள், ஜோதிடங்களைத் தேடிப் போவான். அவர்களை வைத்து சகல காரியங்களையும் சாதிப்பான். பிறகு அவர்களையே திட்டிவிட்டு மற்றப் புது சாமியார்களைப் பார்ப்பான். அவரிடம் அல்வாபோல் பேசுவான். அங்கு ஒரு பத்துவருடம், இவரிடம் ஐந்து வருடம் என்று காலம் ஓட்டி இப்படியே கதை பேசும் போலி ஆன்மீக கூட்டத்தினர் மேல்மட்டம் முதல் கீழ்மட்டம் வரை உண்டு. சாமியார்கள்கூட இப்பொழுது தரகர்களாகவும் வியாபாரிகளாகவும் மாறி விட்ட காலம், கலிகாலம்.



சித்தர் ஆச்சிரமத்தில் அன்னதானம் அளித்தல்

ஸ்ரீரமணி குருஜியிடம் ஒப்பற்ற அன்பும், மக்களை அரவணைக்கும் தன்மையும், மக்களுக்கு சேவை செய்யும் எண்ணமும் உண்டு. அவரது வீரிய செயற்பாடு, அதுவும் குறிப்பாக மேல் நாடுகளில் பகவான் ஸ்ரீகாகபுஜண்டரின் மகிமையைக் கூறி நாடி ஜோதிடத்தைப் பிரபலப் படுத்தியவர் ரமணி குருஜி. நான் ரமணி குருஜியிடம் எனது குருநாதர் தலையாட்டிச் சித்தர் ஸ்ரீகாகபுஜண்டரின் அவதாரம் என்று சொல்கிறார். நீங்களும் அதே நாமத்தில் வாக்குச் சொல்கிறீர்கள். இதன் அர்த்தம் அறிய வேண்டும் என்றேன்.

சரி உட்காருங்கள் என்று கூறிவிட்டு அருள்வாக்கு போன்று நாடியைப் பார்த்துக் காட்டினார். எனக்குத் தேவை. தருமம்; என் வேலையும் அதுவே என்ற எண்ணத்தில் பேசிவிட்டு நாளை சித்தர் வருகிறார் என்று கூறிவிட்டு சென்றேன்.

அதே நேரத்தில் ஸ்ரீரமணி குருஜியின் இவ்விடம் ஒரு மகரிஷி ஜோதி சொரூபமாய்த் தோன்றுவார் என்று சுவடி படிக்கவும் சித்தரைத் தேடி ரமணி குருஜியின் சீடர் வந்தார். ரமணி குருஜியின் அழைப்பை ஏற்று சித்தர் பெருமான் அவரது ஆச்சிரமம் போக அங்கு ரமணி குருஜி சித்தருக்கு பன்னீருடன் பாதபூஜை செய்து வரவேற்றார்.

(தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தனித் தெலுங்கானாவுக்கான போராட்டம் அரசின் பகடைக்காய்களாக மக்கள்...

வளர்ச்சித் திட்டங்களில் புறக்கணிக்கப்படுவதாகவும் பின்தங்கிய நிலையில் இருத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெலுங்கானா பிராந்தியத்தை இத்தனை காலமும் சீமாந்திரா பிராந்தியத்தினர் ஒடுக்கிச் சுரண்டியதாகவும் தெலுங்கானா தலைவர்கள் நியாயவாதம் பேசுகின்றனர். ஆனால், தெலுங்கானா பிராந்தியத்தில் வீட்டுமனை, கல்



குவாரிகள், கனிமச் சுரங்கங்கள், காட்டு வளம் முதலியவற்றைச் சூறையாடி ஆதிக்கம் செலுத்தும் புதுப்பணக்கார மாஃபியாக்களுக்கு எதிராக இத்தலைவர்கள மக்களைத் திரட்டி இதுவரை எந்தப் போராட்டத்தையும் நடத்தியதேயில்லை.

தெலுங்கானா போலவே கோர்க்காலாந்து, போடோலாந்து தனிமாநிலக் கோரிக்கைகள் நீண்டகாலமாக எழுப்பப்பட்டு வருகின்றன. ஏற்கனவே உத்திரப்பிரதேசத்தை நான்கு மாநிலங்களாகப் பிரிக்க வேண்டுமென்று அம்மாநிலச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அசாமிலுள்ள கர்பி மக்கள் தாங்கள் செறிவாக நிறைந்துள்ள அங்லாங் மாவட்டத்தைத் தனி மாநிலமாக்க வேண்டுமென்கின்றனர். மகாராஷ்டிராவில் விதர்பா, குஜராத்தில் சௌராஷ்டிரா, கர்நாடகத்தில் கூர்க், ஒடிசாவில் கோஷாலாஞ்சல், பீகாரில் மிதிலாஞ்சல்– எனத் தனி மாநிலக் கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன. தனியார்மய– தாராளமயமாக்கத்தைத் தொடர்ந்து சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், நான்கு வழிச்சாலைகள், மேம்பாலங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், புதுப்பணக்கார மேட்டுக்குடியினர் என ஒருசில நகர்ப்புற பகுதிகள் மினுக்குகின்றன.

நாட்டின் சில பகுதிகளில் திடீர் வளர்ச்சியையும் இதர பெரும்பாலான பகுதிகளின் பின்தங்கிய நிலையையும் மறுகாலனியாதிக்கம் மேலும் தீவிரப்படுத்தி வருகிறது. இதற்கான காரணத்தைப் பரிசீலிக்காமல் பிராந்திய ஏற்றத்தாழ்வை மட்டும் வைத்து தனிமாநிலக் கோரிக்கையை சந்திரசேகர ராவ் போன்ற ஆளும் வர்க்க அரசியல்வாதிகள் தூண்டுகின்றனர். பொதுச் சொத்துக்களைச் சூறையாடுவதிலும், அரசு சன்மானங்களைப் பங்குபோட்டுக் கொண்டு பொறுக்கித் தின்பதிலும் நடக்கும் போட்டா போட்டியே தனி மாநிலக் கோரிக்கையாக வெளிப்படுகின்றன.

### பிரிவினைக்கு எதிராக அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

தெலுங்கானா தனி மாநிலமாக பிரிக்கப்படுவதை எதிர்த்து கடலோர ஆந்திரம் மற்றும் ராயலசீமாவைச் சேர்ந்த தலைமைச் செயலக அரசு ஊழியர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்

இந்த யதார்த்தத்தைக் காண மறுத்து, ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்பது பிராந்திய அடிப்படையிலோ அல்லது பழங்குடியினத்தின் தனித்த அடையாளமாகவோ எந்த வடிவிலும் வெளிப்படலாம் என்றும் இது அம்மக்களின் நியாயமான ஜனநாயக உரிமைக்கான கோரிக்கையாக உள்ளதால் இத்தகைய தனி மாநிலப் பிரிவினையை ஆதரிக்க வேண்டுமென்றும் சில முதலாளித்துவ அறிவுத் துறையினர் வாதிடுகின்றனர். இதன்மூலம் மக்களை மாயையில் மூழ்கடிக்கின்றனர்.

தெலுங்கு தேசிய இனத்தின் தாயகமாக ஆந்திரப் பிரதேசத்தை இரண்டாகப் பிரிப்பது சரியல்ல என்றாலும் தனிமாநிலம் கோரி தெலுங்கானா மக்கள நீண்டகாலமாகப் போராடி வந்துள்ளதால் மக்களின் உணர்வுகளை மதித்து அதனை ஆதிக்க வேண்டும் என்றும் ஒரே தேசிய இனத்தின் மக்கள் பிராந்திய அடிப்படையில் தனித் தனி மாநிலங்களாகப் பிரிவது தவறானதல்ல என்றும் சில தமிழினவாதிகள் தனித் தெலுங்கானாவை ஆதரிக்கின்றனர். மறுபுறம் இதேபோல் தமிழகத்தையும் பிரிக்க வேண்டுமென சில சாதிய அரசியல்வாதிகள் கோருவதை ஆதரிக்க முடியாது என்றும் ஏனெனில் இது மக்கள் கோரிக்கையல்ல என்றும் விளக்கமளிக்கின்றன. எந்த ஒரு கோரிக்கையும் ஒரு வர்க்கத்தின், சாதியின், இனத்தின் அல்லது பிராந்தியத்தின் அரசியல் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டு பின்னர்தான் அது மக்கள் கோரிக்கையாக உருமாற்றம் பெறுகிறது. அந்த கோரிக்கையின் தன்மை என்ன என்பதிலிருந்து சரி–தவறை பரிசீலிப்பதுதான் சரியான அணுகுமுறையாகும்.

ஆனால், தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கை என்பது பிராந்திய ஏற்றத்தாழ்வை வைத்து ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினர் ஆட்சியதிகாரத்தில் பங்கு கோரும் போட்டா போட்டிதானே அன்றி, அது மக்களுக்கான அரசியல்–பொருளாதார கோரிக்கைகளின் அடிப்படையிலான போராட்டமோ, முற்போக்கான ஜனநாயகக் கோரிக்கையோ அல்ல. ஆளும் வர்க்கப் பிரிவுகளிடையே பொதுச் சொத்தைச் சூறையாடவும் அரசாங்க சன்மானங்களைப் பொறுக்கித் தின்னவும் நடக்கும் போட்டா போட்டிக்காக தெலுங்கானா ஆதரவு– எதிர்ப்புப் போராட்டங்களில் மக்கள் இறக்கிவிடப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும். பல்வேறு ஓட்டுக்கட்சி பதவிகளில் இருந்து வரும் பிழைப்புவாதிகளில் தெலுங்கானாவைச் சேர்ந்த ஒரு பிரிவினர் தான் இப்போராட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக சிறிய மாநிலங்களாகப் பிரிப்பதால் மக்களின் வாழ்வில் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படும் என்பது மிகப்பெரிய மோசடி. இதற்கு ஜார்கண்டும், சட்டிஸ்கரும் எடுப்பான் சான்றுகளாக உள்ளன.

வளர்ச்சி என்ற பெயரில் உள்நாட்டு–வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளின் சூறையாடலும் மக்கள் மீது அறிவிக்கப்படாத இராணு ஆட்சியும்தான் அங்கு நீடிக்கிறது. இந்த உண்மைகளைக் காண மறுத்து



தனி மாநிலக் கோரிக்கையைக் குருட்டுத்தனமாக ஆதரிப்பது அடிப்பைடயிலேயே தவறானதாகும்.

இணையம் (முற்றும்)

# திருமணதரகர் வேலை பார்க்கும் அரசு பற்றி சர்வதேசம் என்ன நினைக்கும்?

## அசாத்சாலி கேள்வி

(கொழும்பு)

**நவநீதம்பிள்ளை எமது தாய்க்கு சமமான ஒரு மனித உரிமை செயற்பாட்டாளராக இருந்த போதும் அவருக்கு திருமணம் முடித்து வைக்கும் தரகர் வேலையைச் செய்யும் அரசு பற்றி சர்வதேசம் என்ன நினைக்கும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் கண்டி மாவட்ட ஐ.தே.க. வேட்பாளருமான அசாத்சாலி தெரிவித்துள்ளார்.**

கண்டியிலுள்ள அவரது காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்து, தனது அயராத கல்வி முயற்சியால் உயர் நிலையை அடைந்து அதன் மூலம் அவர் ஒரு நீதிபதியாகி பின்னர் அவர் மனித உரிமைகள் ஆணையாளராக உயர் பதவிக்கு வந்தவர்.

இவரை நாம் எமது தாயின் நிலையில் வைத்து அவரை ஆதரித்து அவர் வந்துள்ள நோக்கத்தை முடித்து விட்டுச் செல்வதற்கான எமது வழமையான சம்பிரதாயங்களை செய்திருக்கலாம்.

இதை விடுத்து, வயது முதிர்ந்த அவருக்கு திருமண முன் மொழிவு




ஒன்றை அரசு செய்கிறது அல்லது அரசின் பங்காளியான ஒரு அமைச்சர் செய்வதென்றால், சர்வதேச சமூகம் எமது நாட்டைப் பற்றி என் நினைத்திருக்கும். இதனால் பிரச்சினை தீருமா?

18 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்து விட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தற்போது கண்டியில் வைத்து வருத்தம் தெரிவித்துள்ளார். அந்த வருத்தம் காரணமாக நிறைவேற்றப்பட்ட சட்ட மூலத்தை மாற்றமுடியுமா?

கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீ.மு.கா. அங்கத்தவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவை அனைத்தும் நாடகம்.

மகிழ்ச்சிகரமான நாடுகள் பட்டியலில் இலங்கை 137 ஆவது இடத்தில் உள்ளது. அதேநேரம் மியன்மார், பங்களாதேஷ், உகண்டா, நேபாளம் போன்ற நாடுகள் எமக்கு மேல் உள்ளன. அப்படியாயின் எமது நிலை என்ன?

இந்த அரசு சரியான சேவையைச் செய்திருப்பின் சண்டியர்களை கண்டிக்கு அழைத்து வரத்தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)



புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளின் திருமண நிகழ்வு நேற்றுமுன்தினம் கண்டிய நடனத்துடன் கிளிநொச்சி -முல்லைத்தீவு சிவில் பாதுகாப்பு படையின் தலைமையகத்தில் நடைபெற்றபோது...

# யூடோப் போட்டியில் பதக்கம் வென்றார்

(கிளிநொச்சி)

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் இவ்வாண்டுதேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட யூடோப் போட்டியில். ரசீந்திரன் தமிழ் மகள் பதக்கத்தைப் பெற்றுள்ளார். யூடோ போட்டியில் கலந்து கொண்டு பதக்கம் வென்ற ஒரே ஒரு தமிழர் இவராவார்.

இவர் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவியும் மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்தவருமாவார்.

இதேவேளை இளைஞர் கழகங்களுக்கிடையில் வடமாகாணத்தால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான



யூடோப் போட்டியிலும் இவர் முதன் முறை யாகத் தோற்றி பதக்கம் பெற்றமை குறிப் பிடத்தக்கது. (அ-2)

# புகலிட கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்படுவர்

## ஆஸி. அரசாங்கம் புதிய கொள்கை

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் புகலிட கோரிக்கையாளர் குறித்த புதிய கொள்ககைள் பாதக விளைவுகளை அதிகம் உண்டு பண்ணும் என அந்நாட்டு முன்னாள் பாதுகாப்புப் படைத் தளபதி கிறிஸ் பாரீ தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கடற் பரப்பிற்குள் பிரவேசிக்கும் படகுகளை திருப்பி அனுப்பி வைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

திருப்பி அனுப்பி வைக்கக் கூடிய சூழ்நிலையில் காணப்படும் சகல படகுகளும் திருப்பி அனுப்பி வைக்கப்படும் என புதிய பிரதமர் டோனி அப்போட் அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும் இந்த நடவடிக்கையானது பல்வேறு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என பாரீ சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக இந்தக் கொள்கை புகலிடக் கோரிக்கையாளர்களையும் அமெரிக்கக் கடற்படையினரையும் அதிகளவில் பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் காரர்கள் படகுகளை வேண்டுமென்றே பழுதடையச் செய்யக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், சேதமடைந்து தத்தளிக்கும் படகுப் பயணிகளை அவுஸ்திரே லிய கடற்படையினர் மீட்பார்கள் என்ற காரணத்தினால் இவ்வாறு படகுகள் வேண்டுமென்றே சேதப்படுத்தப்படக் கூடிய அபாயம் நிலவி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனால் படகுப் பயணிகள் அதிகளவு உயிர் அச்சுறுத்தல்களை எதிர் நோக்க நேரிடலாம். புதிய பிரதமர் டோனி அப்போட்டின் புதிய புகலிடக் கோரிக்கையாளர் கொள்கைகள் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களை பெரிதளவு பாதிக்குமா என்பது கேள்விக்குறியே.

மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்கள் பாதுகாப்பாக அவுஸ்திரேலியா வந்தடைய ஏதேனும் வழிமுறைகளை அறிமுகம் செய்தவன் மூலம் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தமுடி யும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வட்டுக்கோட்டை தீர்மானத்தை விட விஞ்ஞாபனம் வலிமையானது

## கே.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வட்டுக்கோட்டை தீர்மானத்தை விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனமானது மிகவும் வலிமையானதாக அமைந்துள்ளது.

வடக்கின் இளைஞர்களை மீண்டும் ஒருமுறை ஆயுதம் ஏந்துவதற்கான மறைமுகமான கோரிக்கையினையே விக்னேஸ்வரன் முன்வைத்துள்ளார் என விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச ஒருங்கமைப்பாளரான குமரன்பத்மநாதன் (கே.பி.) தெரிவித்துள்ளார்.

மேலும் நாடு கடந்த தமிழ் ஐக்கியத்தை உருவாக்கியதே நான் தான். அதன் விளைவுகளை பின்னரே நான் உணர்ந்து கொண்டேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இராணுவத் தலைமையகத்தினால் ஏற்பாடு செய்யப்படிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-2)

# கிளாலி இறங்குதுறை பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதி

யாழ்.கிளாலி மீன்பிடி இறங்குதுறை உட்பட அதனைச் சூழவுள்ள பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற கடற்படை தளபதி மற்றும் கரையோர பாதுகாப்பு அதிகார சபையின் தலைவருடனான சந்திப்பின் போதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற காலம் முதல் கிளாலி கடலேரி பகுதியில் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ். நகர் சென்றிருந்த போது இது தொடர்பாக மீனவர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

கடற்றொழில் அமைச்சில் கடற்படை தளபதியுடனான சந்திப்பின் போது கிளாலி கடலேரிப் பகுதியில் எந்நேரமும் சுதந்திரமாக மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்குவதாக கடற்படைத் தளபதி இதன்போது உறுதியளித்தார். இது தொடர்பாக யாழ். கடற்படை அதிகாரிகளுக்கும் அவர் பணிப்புரை விடுத்தார்.

கிளாலி இறங்குதுறை உட்பட அதனை அண்டிய பகுதிகளில் நேற்று முதல் மீன் பிடிப்பதற்கான அனுமதிவழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக யாழ்.குடாநாட்டு மீனவர்களுக்கும் அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்தல் விடுத்துள்ளார். (அ-2)

# தொல்பொருட்கள் அழிக்கப்படுகின்றன

## கணக்காய்வுகள் தகவல்

இலங்கையில் தொல்பொருள் சார் கலைப் பொருட்கள் அழிக்கப்பட்டுவரும் செயல்கள் அதிகரித்து வருவதாக கணக்காய்வுகள் தெரிவிக்கின்றன.


கடந்த 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் தொல்பொருள்சார் கலைப் பொருட்களின் அழிவு 150 வீதத்தால் அதிகரித்துள்ளதாக கணக் காய்வாளர் நாயகம் எஸ்.ஏ.எஸ். சமரவீர தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டில் புதையல் தோண்டுதல், திருட்டு சம்பவங்கள் தொடர்பில் தொல்பொருள்சார் கலைப் பொருட்கள் அழிவடைந்தமை குறித்து 250 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

2012 ஆம் ஆண்டில் இது தொடர்பில் 370 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையை கவனத்திற் கொண்டு தொல்பொருள் அழிக்கப்பட்டு வருகின்றமை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழ், முஸ்லிம் மக்களை எதிரிகளாக கருதினால் நாடு அபிவிருத்தி அடையாது



## கரு ஜெயசூரிய எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சூழ தற்போது பஞ்சமா சக்திகள் இல்லை. கறுப்பு பணத்தை வெள்ளை பணமாக மாற்றும் வியாபாரிகளும் ரௌடிவுகளுமே இருக்கின்றனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை எதிரிகளாக கருதி இந்த நாட்டை முன்னேற்றவோ, உயர்வுக்கு கொண்டு செல்லவோ முடியாது. போருக்கு பின்னர் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தைக் கட்டியெழுப்புவதற்கு பதிலாக அரசாங்கம் இன, மத பேதங்களை ஏற்படுத்தி வருகிறது. இராணுவத்தினர் உயிர்களைத் தியாகம் செய்து எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புடன் செயற்பட்டனரே தவிர தனிநபரையோ, குடும்பத்தையோ பாதுகாப்பதற்கு அவர்கள் உயிர்த்தியாகம் செய்யவில்லை. கௌரவமான சமாதானமே மக்களுக்கு தேவைப்படுகின்றது.

மேலும் இனங்களுக்கு இடையில் ஐக்கியம், நம்பிக்கை, சிந்திக்கும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் என்பனவும் இல்லாமற் போயுள்ளன.

அத்துடன் சர்வதேசத்துடனான நட்புறவான நல்லுறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே அரசாங்கம் வடக்கில் தேர்தல் நடத்துகின்றது.

அதனை விடுத்து மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போரினால் துன்பப்பட்ட மக்களுக்கு ஜனநாயக ரீதியான தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து கொள்ள சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கில் அரசாங்கம் தேர்தலை நடத்தவில்லை.

அதேவேளை தற்போதைய அரசாங்கம் கசினோ பொருளாதாரத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இது நாட்டின் விபச்சாரம், மதுபானம், போதைப் பொருள், ஒழுக்கக்கேடு மற்றும் துப்பாக்கி கலாசாரம் நாட்டில் ஏற்பட வழிவகுக்கும் என்றார். (அ-2)

# உத்தியோகபூர்வமற்ற அமைச்சராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்படுவாரா?

(கொழும்பு)

ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ இளைஞர் விவகார அமைச்சராக நியமிக்கப்படவுள்ளதாக சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுநலவாய் நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டுடன் அம்பாந்தோட்டையில் நடத்தப்படும் பொதுநலவாய நாடுகளின் இளைஞர் விவகார மாநாடு மற்றும் அடுத்த வருடம் செம்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் இளைஞர் மாநாடு ஆகியவற்றுக்கு தலைமைத்துவத்தை வழங்க தயார்ப்படுத்தும் வகையில் அவர் அமைச்சராக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இளைஞர் விவகார அமைச்சு ஜனாதிபதியின் உறவினரான டலஸ் அழகப்பெருமவின் கீழ் இயங்கிய போதிலும் அந்த அமைச்சின் உத்தியோகபூர்வமற்ற அமைச்சராக நாமல் ராஜபக்ஷவே செயற்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அமைச்சின் கீழுள்ள பிரதான நிறுவனமான தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாமல் ராஜபக்ஷவின் முழுமையான கட்டுப்பாட்டுள் இருப்பதாகவும் அவ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# சுங்க பரிசோதனைகளை இலகுவாக்குவதற்கு திட்டம்

பொருட்கள் இறக்குமதியில் இது வரை நடைமுறைப்படுத்தப்பட்ட சுங்க பரிசோதனை செயற்பாடுகளைமேலும் இலகுவாக்குவதற்கு சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்புதிய திட்டம் நேற்று முன் தினம் முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும் சுங்கப் பணிப்பாளருமான லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின் ஊடாக சுங்கப் பரிசோதனைக்காக செலவிடப்பட்ட காலம் மற்றும் ஆவணங்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. இதன் முதல் கட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதுடன் இந்த நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தொடர்ந்தும் விரிவுபடுத்துவதற்கு எண்ணியுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இறக்குமதியாளர்கள், சுங்க அதிகாரிகள் பலரை நாடி பெற்றுக் கொண்ட சேவைகளை ஒரு அதிகாரியின் ஊடாக நிறைவேற்றக் கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (அ-2)

# சிங்கள ராவய அமைப்பின் பிக்குகளுக்கு பிடிவிறாந்து

(கொழும்பு)

சிங்கள ராவய அமைப்பின் பிக்குகளுக்கு பிடிவிறாந்து உத்தரவை களுத்துறை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ளதாக தெரியவருகின்றது.

சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரட்ன தேரர் உள்ளிட்ட நான்கு பௌத்த பிக்குகளுக்கே இவ்வாறு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடத்தப்படவிருந்த கூட்டம் கலகத்தை ஏற்படுத்தும் என தெரிவித்து பொலிஸார் நீதிமன்றின் அனுமதியுடன் கூட்டத்திற்கு தடை விதித்திருந்ததாகவும் எனினும் குறித்த தடையை மீறி சிங்கள ராவய அமைப்பு களுத்துறை மக்கானே பிரதேசத்தில் கூட்டத்தை நடத்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு நீதிமன்றின் உத்தரவை மீறிச் செயற்பட்டமைக்காக சிங்கள ராவய அமைப்பின் முக்கியஸ்தர்கள் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டிருந்ததாகவும் இந்த உத்தரவை இவர்கள் ஏற்க மறுத்த காரணத்தினால் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# புகையிரதம் முன் பாய்ந்து இளைஞர் தற்கொலை

மாத்தறையில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற புகையிரதத்தின் முன் பாய்ந்து இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை மாத்தறை கும்புறுகமுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதான இளைஞரே இவ்வாறு தற்கொலை செய்து கொள்டுள்ளார். உயிரிழந்தவரின் பணப்பையில் இருந்த தேசிய அடையாள அட்டை மூலம் அவர் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)




- ❖ 1633 -சூரியனைப் பூமி சுற்றுவதாகத் தெரிவித்த கலிலியோ கலிலி, கத்தோலிக்க மதகுரு மன்றத்தின் முன்னால் விசாரிக்கப்பட்டார்.
- ❖ 1697 -ஒன்பதாண்டுப் போரை (1688-1697) முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு பிரான்ஸ், லண்டன், ஸ்பெயின், புனித ரோமப் பேரரசு டச்சுக் குடியரசு ஆகியவற்றிற்கிடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.
- ❖ 1847 -நீலப் பென்னி அஞ்சல் தலைஸ்ய பிரித்தானியா மொரீசியசில் வெளியிட்டது.
- ❖ 1854 - பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படையினர் கிறிமியாவில் இடம்பெற்ற போரில் ரஷ்யர்களைத் தோற்கடித்தனர்.
- ❖ 1857-கிழக்கிந்தியக் கம்பனிக்கு விசுவாசமான படைகள் டில்லியைக் கைப்பற்றின. சிப்பாய் எழுச்சி முடிவுக்கு வந்தது.
- ❖ 1878 - த ஹிந்து இதழ் வெளியிட ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ 1932-மகாத்மா காந்தி புனே சிறையில் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- ❖ 1942 -உக்ரேனில் நாசி ஜேர்மனியர்கள் இரண்டு நாட்களில் மொத்தம் 3 ஆயிரம் யூதர்களைக் கொன்றனர்.
- ❖ 1945- மகாத்மா காந்தியும் ஜவகர்லால் நேருவும் பிரித்தானியப் படைகளை வெளியேறக் கோரினர்.
- ❖ 1966-சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனை நோக்கிச் செலுத்தப்பட்டது.
- ❖ 1977 - வடக்கு வியட்நாம் ஐநாவில் இணைந்தது.
- ❖ 1979 - மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து பேரரசன் முதலாம் பொக்காசா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- ❖ 1993 - துருவ செயற்கைக்கோள் ஏவுகணையை இந்தியா ஏவியது.

இறப்புகள்

- ❖ 1933 -அன்னி பெசண்ட், பெண் விடுதலைக்குப் போராடியவர் (பி. 1847)
- ❖ 1971 -ஜியோர்கஸ் செபெரிஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி. 1900)
- ❖ 1975-சென் ஜோன் பேர்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- ❖ 1996-பால் ஏர்டோசு, அங்கேரி நாட்டுக் கணிதவியலாளர் (பி. 1913)

### அன்னி பெசண்ட்



1847 ஆம் ஆண்டில் அயர்லாந்தில் ஒரு சாதாரண ஐரியக் குடும்பத்தில் பிறந்து லண்டனில் குடியேறியவர். மூடப் பழக்கவழக்கங்களுக்கெதிராகப் பரப்புரையை ஆரம்பித்தார். இதனால் மத சமூகத்தினரின் எதிர்ப்புக்கு ஆளானார்.

"நியூமால் தூசியன் அமைப்பு" என்ற சீர்திருத்தச் சங்கத்துக்குத் தலைவியானார் அன்னி பெசண்ட். "லிங்க்" என்ற பெயரில் பத்திரிகையைத் தொடங்கி, இந்தியாவிலும் அயர்லாந்திலும் வீடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் பெண்கள் விடுதலை, தொழிலாளர் உரிமைகள், குடும்பக் கட்டுப்பாடு போன்ற பலவற்றிலும் தனது கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

The Secret Doctrine எனும் நூலை எழுதிய பிளேவட்ஸ்கி அம்மையாரை பாரிசில் 1889 ஆம் ஆண்டில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. பிரும்மஞான சபையின் உறுப்பினரான இவர் முதற் தடவையாக 1893 ஆம் ஆண்டு இந்தியா வந்தார். இந்தியா வந்த அன்னி பெசண்ட், சென்னையில் அடையாறில் பிரும்மஞான சங்கத்தின் தலைமை நிலையத்தை நிறுவினார். இந்து சாத்திரங்களை ஆழ்ந்து படித்து பல நூலகளை எழுதினார். பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். காசியில் சில காலம் வசித்த அன்னி பெசண்ட் அங்கு இந்து சமய விளக்கங்களை முறைப்படி பெற்றார்.இந்துவாகவே வாழலானார்.

அன்னி இயற்கையிலேயே புரட்சி மனப்பான்மை கொண்டவ்ராதலால், ஆங்கில அரசின் அடக்குமுறைகள் அவரை வெகுவாகப் பாதித்தன. விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக கொமன் வீல்' என்ற வாரப் பத்திரிகையை 1913 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். 1914 ஆம் ஆண்டில் சென்னையில் இருந்து நியூ இந்தியா என்ற பெயரில் நாளேடு ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். இதன்மூலம் அவர் அரசியலில் இழுக்கப்பட்டார். ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கத்தை தொடங்கினார். நாடு முழுவதிலும் அதன் கிளைகள் உருவாகின.

அன்னி பெசண்டின் சுற்றுப் பயணங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் ஆங்கிலேய அரசு தடை விதித்தது. டிசெம்பர் 1917 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் நடந்த மாநாட்டில் இந்திய காங்கிரசின் தலைவராக ஓராண்டிற்குத் தெரிவானார். ஆனால், காங்கிரசில் இருந்து விலகி இருந்தார். ஆனாலும் இந்திய விடுதலையில் முன்போலவே ஈடுபாடு காட்டி வந்தார். 1929 இல் "பொதுநலவாய இந்தியா" என்ற பெயரில் ஒரு அறிக்கையை எழுதி பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்.

கலிபோர்னியாவில் 'ஹப்பி வலி பாடசாலை"யை அமைத்தார்கள். இப்பாடசாலை தற்போது அன்னி பெசண்டின் நினைவாக பெசண்ட் ஹில் பாடசாலை எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அன்னி பெசண்ட் அமைத்த சென்னை அடையாறில் உள்ள பிரும்மஞான சபை இன்றும் அவர் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறது.



# அரசின் புதிய உத்தி- போர்க்குற்ற ஆதாரங்கள் வேண்டும் ?

சர்வதேச அளவில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வதற்கு அரசாங்கம், காலத்துக்கு காலம் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு வருகிறது. போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்களும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டபோது அவற்றை அடியோடு நிராகரிப்பதில் அரசாங்கம், உறுதியான கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது.

போரின்போது எந்த மீறல்களுமே நடக்கவில்லை. சர்வதேச சட்டங்களுக்கு அமையவே போரை நடத்தினோம் என்று அரசாங்கம் கூறிவந்தது. ஆனால், அரசாங்கத்துக்கு எதிரான பல போர்க்குற்ற ஆதாரங்கள் வெளியான நிலையிலும் சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வந்த நிலையிலும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால், போரின்போது எங்காவது சில மீறல்கள் நடந்திருக்கலாம். அது குறித்து விசாரிக்கப்படும் என்று மெல்ல சுருதியை மாற்றிக்கொள்ளத் தொடங்கியது. ஆனால், மீறல்கள் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பை மட்டும் அரசாங்கம், வெளியார் யாருக்கும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.

நாமே விசாரணை நடத்துகிறோம், குற்றங்கள் நடந்திருந்தால் கண்டுபிடிக்கிறோம் என்பதில் உறுதியாகவே இருந்தது. ஆனால், அதில் பெரிதாக எந்த முன்னேற்றமும் காணப்படாத நிலையில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றியபோது சில விடயங்களில் விட்டுக்கொடுத்து நடந்தாக வேண்டிய நிலை உருவானது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் பலவற்றை நடைமுறைப்படுத்துவதாக அரசாங்கம் அறிவித்ததற்குக் காரணம் அதுதான். ஆனாலும், இலங்கை அரசின் நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தக் கூடியளவுக்கு இருக்கவில்லை என்பதே இப்போதுள்ள பிரச்சினை.

இதனால், இலங்கை அரசாங்கம் பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டு வருகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சமாளிக்க அரசாங்கம் இப்போது மற்றொரு வியூகத்தை வகுத்துள்ளது. குற்றங்கள், மீறல்களுக்கு சாட்சியங்கள் உள்ளதா- ஆதாரங்கள் உள்ளதா? என்று கேள்வி எழுப்புவதே இந்தப் புதிய உத்தி.

மனித உரிமை மீறல்களுக்கு ஆதாரங்களை அல்லது சாட்சியங்களைத் திரட்டுவது மிகப் பெரிய சிக்கலான விடயம். அதுவும் சாட்சியங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்ட ஏற்பாடுகள் ஏதும் இல்லாத ஒரு நாட்டில் மனித உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்களையும் சான்றுகளையும் திரட்டுவது மிகவும் கடினமான காரியம். பல சந்தர்ப்பங்களில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் மட்டும் இருக்கும் சிலவேளைகளில் அதுவும் இருக்காது.

குறிப்பாக, சட்டத்துக்குப் புறம்பான கொலைகளுக்குப் பெரும்பாலும் நேரில் கண்ட சாட்சியங்களும் இருக்காது; கொலை செய்யப்பட்டவர்கள் சாட்சியமளிக்க வரப்போவதுமில்லை. இத்தகைய மீறல்களுக்கு எந்த ஆதாரங்களும் இருக்காது.

அதுபோலவே அடையாளம் தெரியாதவர்களாலும் முகமூடி அணிந்தவர்களாலும் கொல்லப்பட்டவர்கள் கடத்தப்பட்டு காணாமற்போனவர்களுக்கும் எத்தகைய ஆதாரங்களையும் சமர்ப்பிக்க முடியாது. எவருமே ஆதாரங்களைக் கொடுத்து விட்டு மனித உரிமைகளை மீறுவதில்லை.

அதுவும் முப்பதாண்டு ஆயுதப் போராட்டத்தை எதிர்கொண்ட, ஒரு அரசாங்கத்தின் படையினர், ஆதாரங்களைக் கொடுத்துக் கொண்டு மீறல்களை இழைத்திருப்பர் என்று எதிர்பார்க்கவே முடியாது. எனவேதான், அரசாங்கம் துணிச்சலாக ஆதாரங்களை சமர்ப்பித்தால் விசாரணை நடத்தலாம் என்ற துரும்பைத் தூக்கிப்போட்டது.

போரின் இறுத்திக் கட்டத்தில் கொல்லப்பட்டவர்கள், காணாமற்போனவர்கள் குறித்து, எங்கிருந்து ஆதாரங்களைத் தேடிக் கொள்ள முடியும்? பல நாட்கள் பதுங்கு குழிகளுக்குள், உணவு, குடிநீர் இன்றி வாடிப்போய், உயிர் மட்டும் தப்பினால் போதும் என்று படையினரிடம் வந்து சேர்ந்தவர்களிடம் ஆதாரம் கேட்டால் எதைத்தான் கொடுக்க முடியும்?

போரின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள் எவரும் சரணடையவில்லை என்றும், எவரும் எவரையும் ஒப்படைக்கவில்லை என்றும் எழிலனின் ஆட்கொணர்வு மனு மீதான வழக்கில் இராணுவத் தரப்பு, மேல்நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அவ்வாறு சரணடைந்திருந்தால் அவர்களுக்குப் படையினர், அவர்களைப் பொறுப்பேற்றதற்கான உறுதிச் சீட்டைக் கொடுத்திருப்பர் என்று இராணுவத் தரப்பு, கொடுத்துள்ள விளக்கம் நகைப்புக்கிடமானது. போர் முனையில் சரணடையும் எவருக்காவது உறுதிச்சிட்டுக் கொடுக்கும் வழக்கம் இலங்கையில் மட்டுமல்ல உலகில் கூட எங்கும் நடந்திருக்காது.

இந்த ஆட்கொணர்வு மனுக்களில் காணாமற் போனவர்களைத் தாம் படையினரிடம் ஒப்படைத்த போது பெருமளவு மக்கள் அதனைக் கண்டதாக கூறியுள்ளனர். இருந்தாலும் படையினருக்கு எதிராக அவர்களில் எத்தனை பேர் சாட்சியமளிக்க முன்வருவார்கள் என்ற கேள்வி உள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் பல சம்பவங்களுக்குச் சாட்சிகளாக இருந்தவர்கள் அச்சத்தின் காரணமாக நாட்டை விட்டும் வெளியேறி விட்டனர். எனவே, சரணடைந்தவர்கள் குறித்த ஆதாரங்களை தேடிப்பிடித்து அதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சிரமமான காரியம் தான்.

இந்த விவகாரத்தில் மட்டுமன்றி, எல்லா விடயங்களிலுமே அரசாங்கம், ஆதாரம், சாட்சியத்தைத்தான் கேட்கிறது. அண்மையில் இலங்கைக்கு உண்மையைக் கண்டறியும் களப்பயணத்தை மேற்கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரான நவநீதம்பிள்ளையைச் சந்தித்த பலர், அச்சுறுத்தப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

கொழும்பில் மட்டுமன்றி, ஜெனிவாவிலும் ஆரம்பமாகியுள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தைத் தொடங்கிவைத்து நிகழ்த்திய உரையிலும் நவநீதம் பிள்ளை இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார்.

அதற்கு அவ்வாறு அச்சுறுத்தப்பட்டிருந்தால், அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கத் தயார் என்று அரசாங்கம் பதிலளித்துள்ளது. இத்தகைய அச்சுறுத்தல் குறித்து ஆதாரங்கள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை சமர்ப்பிக் காது என்பது அரசாங்கத்துக்கு நன்றாகவே தெரியும்.

சாட்சிக்கு உரிய பாதுகாப்பு இல்லாத சூழலில், அத்தகைய சான்றுகளை ஐ.நா. வழங்க முன்வராது. அதனால் தான், அரசாங்கத்தால் துணிச்சலுடன், ஆதாரங்களைக் கோரமுடிகிறது. எவ் வாறாயினும், இலங்கையில் நடந்த மீறல்கள் தொடர்பான ஆதாரங்கள் ஏதுமில்லாமல் தான், அமெரிக்கா போன்ற நாடுகள், இலங்கை மீது குற்றச்சாட்டுக்களைக் கூறுகின்றன என்று கருதி விட முடியாது. முள்ளிவாய்க்காலில் போர் நடந்து போது, அமெரிக்க செய்மதிகளும், ஐ.நா செய்மதிகளும் கண்களை மூடிக்கொண்டிருக்கவில்லை. போர் வலயத்தை, அவை படம் பிடித்துக் கொண்டிருந்தன.


அத்தகைய சில படங்கள் ஐ.நா. வினால் வெளியிடப்பட்டும் உள்ளன. இன்னும் வெளிப்படுத்தப்படாத ஆதாரங்களும் படங்களும் ஐ.நா.விட்மும் அமெரிக்காவிடமும் இருக்கலாம்.

உள்ளக செயல்முறைகளின் மூலம் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற நடவடிக்கை எடுக்காது போனால், சர்வதேச்ச விசாரணை அழுத்தங்கள் அதிகரிக்கும் என்று, தெற்கு, மத்திய ஆசியாவுக்கான துணை இராஜாங்கச் செயலாளராக பரிந்துரைக்கப் பட்டுள்ள, நிஷா தேசாய் பிஸ்வால், கடந்த வாரம் எச்சரித்திருந்தார்.

அத்தகைதொரு விசாரணைப் பொறிமுறை பற்றிய விவகாரம் வெடிக்கும் போது, அமெரிக்கா அந்த ஆதாரங்களை வெளியே தூக்கிப்போடலாம். இப்போதைக்கு அரசாங்கம், ஆதாரங்களை சமர்ப்பித்தால், விசாரிக்க முடியும் என்ற உத்தியை வைத்து, சர்வதேச சமூகத்தைச் சமாளிக்க முடிந்தாலும், அது நெடுநாட்களுக்கு கை கொடுக்குமா என்பது சந்தேகம்தான்.

-கே.சஞ்சயன்-

# தமிழுக்கு பெருமை சேர்க்கும் iPhone 5



பல மாதங்களாக எதிர்பார்த்த, புதிய ஐபோன் 5, சென்ற செப்டெம்பர் 10, கலிபோர்னியாவில் தன் தலைமை அலுவலகத்தில், அப்பிள் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. அதே நேரத்தில், ஜப்பானிலும் இந்த போன் அறிமுகப்படுத்தப்பட்டது. "எதிர்காலத்திற்கான சிந்தனையோடு, இதுவரை எவரும் தர முடியாத மொபைல் போன் இது" என அப்பிள் நிறுவனம் கூறியுள்ளது.

ஆனால், தமிழர்களுக்கு இது உண்மையிலேயே இதுவரை எவரும் தராத போனாகத்தான் உள்ளது. போனிலேயே தமிழ் உள்ளீடு செய்திடும் செயற்பாடு தரப்பட்டுள்ளது. இதில் இயங்கும் ஐ.ஓ.எஸ் 7 என்னும் அப்பிள் நிறுவனத்தின் மொபைல் ஒப்பரேட்டிங் சிஸ்டம் தமிழ் மொழிச் செயற்பாட்டினையும் உள்ளடக்கியதாக உள்ளது. இது தமிழுக்குப் பெருமையாகும்.

ஐ போன் 5 எஸ் மற்றும் குறைந்த விலை போனாக ஐபோன் 5சி என இரு மொடல்கள் வெளியாகி உள்ளன. ஐபோன் 5 எஸ், 16, 32 மற்றும் 64 ஜிபி என மூன்று மொடல்களில், தங்கம், வெள்ளி மற்றும் ஸ்பேஸ் கிரே வண்ணங்களில் கிடைக்கும். அமெரிக்காவில், இரண்டாண்டு மொபைல் சேவை நிறுவன ஒப்பந்தத்துடன் இவை 199, 299 மற்றும் 399 டொலர் கட்டணத்தில் கிடைக்கும்.

ஏனைய நாடுகளில் இந்த போன்களின் விலை, இவை சந்தைக்கு வரும்போது தெரியவரும். செப்டெம்பர் 20 முதல், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் மற்றும் பிற நாடுகளில் இவற்றை வாடிக்கையாளர்கள் வாங்கிக் கொள்ளலாம். இந்த போன்களுடன் ஐ.ஓ.எஸ்.7 என்னும் புதிய மொபைல் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தினை, அப்பிள் நிறுவனம் வழங்குகிறது. முதன் முதலாக, தன் ஐ.ஓ.எஸ். சிஸ்டத்தில் பெரிய அளவில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

**ஐபோன் 5 எஸ் மொபைல் போனின் சிறப்பம்சங்கள்:**

1.புரோசசர்: ஏறத்தாழ நூறு கோடி ட்ரான்சிஸ்டர்களுடன் கூடிய 64 பிட் புரோசசர் கொண்ட முதல் மொபைல் போனாக ஐபோன் 5 எஸ் வந்துள்ளது.

2. விரல் ரேகை: டச் ஐடி ("Touch ID") என்று அழைக்கப்படும் இந்த போனில், வெகுகாலமாக எதிர்பார்த்த, விரல் ரேகை அறியும் சென்சர் வசதி தரப்பட்டுள்ளது. பயனாளர்கள், இதனைப் பயன்படுத்தி, போனை இயக்கலாம். இது தேவை இல்லை என்றால், முன்பு போல நான்கு இலக்க பாஸ்வேர்ட் வைத்துக்கொள்ளலாம். அல்லது பாஸ்வேர்ட் இல்லாமலும் பயன்படுத்தலாம்.

3. பட்டரி : தொடர்ந்து 10 மணி நேரம் 3ஜி இயக்கம் தரக்கூடிய திறன் கூடிய பட்டரி தரப்பட்டுள்ளது. ஒருமுறை சார்ஜ் செய்தால், 250 மணி நேரம் மின்சக்தியைக் கொடுக்கும். தொடர்ந்து 10 மணி நேரம் வீடியோ பார்க்கலாம் 40 மணி நேரம் ஓடியோ கேட்டு ரசிக்கலாம்.

4. கமரா: இதன் ஐ சைட் (iSight) கமரா 28 மெகா பிக்ஸெல் திறன் கொண்டது. அப்பிள் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட லென்ஸ் இயங்குகிறது. தொடர்ந்து ஒரு விநாடியில் 10 படங்களை எடுக்கும் "burstmode" கிடைக்கிறது. தானாக போகஸ் செய்திடும் வசதி, முகம் அறிந்து இயக்கும் வசதி ஆகியவையும் தரப்பட்டுள்ளன. இதன் வீடியோ பதிவு நொடிக்கு 30 பிரேம்களைப் பதிகிறது.

5. இலவச அப்ளிகேஷன்கள்: இதுவரை கட்டணம் செலுத்திப் பெற்ற Apple's Pages, Numbers, Keynote, iPhoto, and iMovie apps அப்ளிகேஷன்கள் இதில் இலவசமாகவே இணைத்துத் தரப்படுகின்றன.

6. வடிவமைப்பு: இதன் பரிமாணங்கள்: 123:8 x58.6 x 7.6 மிமீ. எடை 112 கிராம்.

7. திரை: மல்ட்டி டச் வசதியுடன் 4 அங்குல திரை 1136 x 640 பிக்ஸெல் திறன் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.




## கிராக் செய்யமுடியாத இணைய வலையமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள்

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படும் இணைய சேவையில் தற்போது பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

இதனால் தகவல்களை திருடுதல், அநாவசியமான தகவல்களை அனுமதி இன்றி பதிவேற்றம் செய்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதனைத் தடுப்பதற்காக கிராக் (Crack) செய்ய முடியாத இணைய வலையமைப்பு ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் Toshiba's Cambridge Research Laboratory விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர். இதற்காக விலையுயர்ந்ததும், சிக்கல் தன்மை வாய்ந்ததுமான தகவல் பரிமாற்றி மற்றும் உணரி ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவை போட்டோன் துணிக்கைகளை ஒன்றன் பின் ஒன்றாக கடத்துவதன் ஊடாக தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்கின்றன.


## யாஹூ இணையத்துக்கு 800 மில்லியன் வாசகர்கள்

யாஹூ தலைமை நிர்வாக அதிகாரியான மரிசா மேயர் யாஹூ இணையத்தள நிறுவனம் இப்போது 20% அதிகரித்து, உலகம் முழுவதும் சுமார் 800 மில்லியன் பயனர்களை கொண்டுள்ளது என்று கூறியுள்ளார்.

சான் ஃப்ரான்சிஸ்கோவில் நடைபெற்ற ஒரு தொழில்நுட்ப மாநாட்டில் யாஹூ நிறுவனம் அதன் சமீபத்திய ஆதாரத்தை வெளிட்டுள்ளது.

யாஹூவில் இணையத்தள சேவை அதிகரித்த போதிலும், ஒன்லைனில் இன்னும் அதன் விளம்பர வருவாய் பெருக்குவதற்காக போராடிக்கொண்டிருக்கிறது. கூகுள் மற்றும் மற்றொரு போட்டியாளரான, ஃபேஸ்புக் இன்க், செல்வாக்குடன் இருந்தபோதிலும் சமீபத்திய காலாண்டுகளில் யாஹூ நிறுவனத்தின் விளம்பர வருவாய் அதிகமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், யாஹூவின் வருவாய் வளர்ச்சியை தூண்டுவதற்கு தனது மூலோபாயத்தை குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் விரிவாக்க வேண்டும் என்றும் மேயர் கூறியுள்ளார்.

## SignEasy மென்பொருள்




தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக எந்தவொரு மனித செயற்பாட்டையும் இலகுவாக்கும் பொருட்டு பல்வேறு கணனி மென்பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் வரிசையில் தற்போது மொபைல் சாதனங்களின் மூலம் கையெழுத்துக்களை பயன்படுத்தக் கூடிய வகையில் SignEasy எனும் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அப்பிளின் iOS மற்றும் கூகுளின் அன்ரோயிட் சாதனங்களில் செயற்படக்கூடிய இம்மென்பொருளின் மூலம் இலகுவான முறையில் கையெழுத்துக்களை போடக்கூடியதாகவும் அவற்றினை தேவைக்கு ஏற்றால் போல் அசைத்து பயன்படுத்தக்கூடியவாறும் காணப்படுகின்றது.

## நீரிலும் கார்...

நிலம், நீர் என இரண்டிலும் செல்லும் உலகின் முதல் நீர்மூழ்கி காரை சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த ரின்ஸ்பீடு வடிவமைத்துள்ளது. இந்த கார் என்பதால் கூரை இல்லாமலும் தண்ணீருக்குள் மூழ்கிச் செல்லும். பயணிகள் தண்ணீருக்குள் செல்லும் போது விசேட உடைகள் மற்றும் செயற்கை சுவாச கருவிகளுடன் இந்த காரை எப்போதும் போல் சாரதி இருக்கையில் அமர்ந்து செலுத்தலாம்.



## இரண்டு தொடுதிரைகளுடன் ஸ்மாட் கைபேசி

உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் இரண்டு தொடுதிரைகளைக் கொண்ட ஸ்மார்ட் கைபேசியானது எதிர்வரும் நவம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

YotaPhone எனும் இக்கைப்பேசி தொடர்பாக இந்த வருடம் பெப்ரவரி மாதம் இடம்பெற்ற Mobile World Congress நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டிருந்தது.

கூகுளின் Android 4.2.2 Jelly Bean இயங்கு தளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன், 4.3 அங்குல அளவுடைய LCD தொடுதிரைகளைக் கொண்டுள்ளது.


இதன் Processor ஆனது 1.7GHz வேகத்தைக் கொண்டிருப்பதுடன் பிரதான நினைவகமாக 2GB RAM காணப்படுகின்றது.

இவற்றுடன் சேமிப்பு நினைவகமாக 32GB கொள்ளளவு, 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 1 மெகாபிக்சலை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா போன்றனவும் காணப்படுகின்றன.



# சிரிய போரை முடிவுக்கு கொண்டுவர ஆசாத்தை பதவியிலிருந்து நீக்குவேன்

## ஒபாமா திட்டவட்டம்



(வோஷிங்டன்)

**சிரியாவில் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஜனாதிபதி ஆசாத்தை பதவியில் இருந்து நீக்குவதே எனது நோக்கமாகவுள்ளது. நிச்சயம் அவரை பதவியிலிருந்து நீக்கியே தீருவேன் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.**

அரசு ஆதரவு படையினர் அண்மையில் பேரழிவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தினர். இதில் ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதற்கிடையே சிரியாவில் பேரழிவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதை ஐ.நா. சபை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

### ஐ.நா.வில் தீர்மானம்

சிரியா வாக்குறுதி அளித்தபடி நடந்து கொள்ளாவிட்டால் அந்த நாட்டின் மீது தடைகள் விதிப்பது தொடர்பாக ஐ.நா.வில் தீர்மானம் கொண்டுவர மேற்கத்தேய நாடுகள் தீவிரமாக களம் இறங்கி உள்ளன.

இது தொடர்பான வரைவு தீர்மானத்தை பிரான்சும், இங்கிலாந்தும் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கிற நாடுகளுக்கு அனுப்பவுள்ளன.

### ஒபாமா உறுதி

இந்த நிலையில் சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்தை ஆட்சியை விட்டு விரட்டுவதில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உறுதியாக வுள்ளார்.

இது தொடர்பாக ஒபாமா அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது,

சிரியாவில் ஆசாத் பதவியில் இருக்கிற வரையில், அங்கு உள்நாட்டுப் போர் முடிவுக்கு வரும் என்பதை கற்பனை செய்வதே கடினமான ஒன்று என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆசாத்தை ஆட்சியிலிருந்து அகற்றுவது தான் இன்னும் என்னுடைய நோக்கமாக இருக்கிறது. அப்போதுதான் அங்கு மதம் சார்ந்த சிறுபான்மையினரைப் பாதுகாக்க முடியும். மத வெறியர்கள் ஆதிக்கத்தை தடுக்க இயலும்.

### நடவடிக்கைகள்

அந்த வகையில் நாங்கள் எடுக்கிற முதலாவது நடவடிக்கைதான், சிரியாவின் இரசாயன ஆயுத விவகாரம் ஆகும். அடுத்த கட்ட நடவடிக்கை, சிரியா பிரச்சினையில் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும், ரஷ்யா போன்ற சிரிய ஆதரவு நாடுகளையும் பங்கேற்க வைப்பதும் தான் என அவர் கூறினார். (2)

# இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் ஒபாமாவை சந்திப்பார்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இம்மாத இறுதியில் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள இச் சந்திப்பின்போது, பாலஸ்தீனத்துடனான அமைதிப் பேச்சுவார்த்தை, ஈரான் மற்றும் சிரியா விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதிப்பார்கள்.

மேலும், நியூயோர்க்கில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மன்றக் கூட்டத்தில், ஒபாமாவும், நெதன்யாகுவும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

இதுகுறித்து நெதன்யாகு கூறுகையில், நியூயோர்க் மற்றும் வோஷிங்டன் சந்திப்பின் போது ஈரானின் அணு ஆயுதத் திட்டத்தை தடுத்து நிறுத்துவது குறித்து பேசவிருப்பதாகத் தெரிவித்தார். (2)




# இரசாயன ஆயுதங்களை அழிக்க ஓராண்டு காலம் தேவைப்படும்

## ஆசாத் தெரிவிப்பு



(டமாஸ்கஸ்,)

இரசாயன ஆயுதங்களை அழிக்க ஒரு ஆண்டு தேவைப்படும் என சிரிய ஜனாதிபதி பசர் அல் ஆசாத் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் பொதுமக்கள் மீது இராணுவம் இரசாயன ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தை அடுத்து சிரியாவுக்கு ஐ.நா. சபை மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் நெருக்கடி கொடுத்தன.

சிரியாவை தாக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்தது. இதற்காக போர் கப்பல்களையும் சிரியா அருகே அமெரிக்கா நிறுத்தியது. சிரியா தனது இரசாயன ஆயுதங்களை அழித்துவிட்டால் தாக்குதல் நடத்தமாட்டோம் என்று அமெரிக்கா கூறியது. அதை சிரியா ஏற்றுக்கொண்டுள்ளது. இதனால்போர் பதற்றம் சற்று தணிந்துள்ளது.

இந் நிலையில் சிரிய ஜனாதிபதி தொலைக்காட்சி ஒன்றில் தோன்றி அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது,

எங்கள் இராணுவம் இரசாயன ஆயுத தாக்குதல் எதுவும் நடத்தவில்லை. எங்கள் மீது தவறான குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.

எங்களிடம் இருக்கும் இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் நாங்கள் இதை உடனடியாக செய்ய முடியாது. இரசாயன ஆயுதங்களை அழிக்க பல 100 கோடி ரூபாய் தேவைப்படும். மேலும் இதை செயற்படுத்த நிபுணர்களும் தேவைப்படுகிறார்கள். எனவே ஒவ்வொன்றாக தான் ஆயுதங்களை கடும் சிரமத்துக்கிடையே அழிக்க முடியும். இதற்கு ஒரு ஆண்டு காலம் தேவைப்படும்.

அமெரிக்கா எங்கள் நாட்டு உள் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதாக நான் கருதுகிறேன். இவ்வாறு அவர் கூறினார். (2)

# அமெரிக்காவும் இஸ்ரேலும் நமது முக்கிய எதிரிகள்

## அல்கொய்தா தலைவர் தெரிவிப்பு

(லண்டன்)

முஸ்லிம் நாடுகளில் வசிக்கும் இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களை விட்டு விடுங்கள். அமெரிக்காவும், இஸ்ரேலுமே நமது முக்கிய எதிரிகள், என, "அல் கொய்தா" பயங்கரவாத அமைப்பின் தலைவர், அல்- ஜவாஹிரி கூறியுள்ளார். உலகின் அதி பயங்கரவாத அமைப்பான, அல்-கொய்தாவின் தலைவர், ஜவாஹிரி, உலகெங்குமுள்ள அந்த அமைப்பின் போராளிகளுக்கு, அறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இது குறித்து அவ்வறிக்கையில் அவர் கூறியுள்ளதாவது, முஸ்லிம் நாடுகளில் வசிக்கும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் சீக்கியர்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம். ஷியா மற்றும் சன்னி வகுப்பு முஸ்லிம்களிடையே பிரச்சினைகள் வேண்டாம். இருவரும் இணைந்து ஒன்றாக செயற்பட வேண்டும்.

காஷ்மீரில், இந்திய இராணுவம், காகசஸ் பகுதியில் ரஷ்ய இராணுவம், ஜின்ஜியாங்கில் சீன இராணுவம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டங்கள் நியாயமானதே.

பெண்கள் மற்றும் குழந்தைகளை கொல்ல வேண்டாம். அவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும். அல்-கொய்தாவின் முக்கிய எதிரிகள், அமெரிக்காவும், இஸ்ரேலுமே. மசூதிகள் மற்றும் முஸ்லிம்கள் அதிகம் கூடும் இடங்களில் தாக்குதல் நடத்த வேண்டாம் என அதில் அவர் கூறியுள்ளார். (2)



ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஐ.நா. சபையின் சட்ட விவகாரத்துறை செயலாளராக போர்த்துக்கலைச் சேர்ந்த மிகுல் டி செர்பா சோறெசிற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீ மூன் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததைப் படத்தில் காணலாம்.

# உலகின் மிக உயரமான இடத்தில் விமான போக்குவரத்து

(பீஜிங்)

சீனாவில் அமைக்கப்பட்டுள்ள, உலகின் மிக உயரமான விமான நிலையத்தில், விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சீனாவில், திபெத் பகுதியில், கடல் மட்டத்தில் இருந்து, 14 ஆயிரத்து 472 அடி உயரத்தில் உள்ள, டாவோசெங் யாடிங்கில், இந்த விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

உயரமான இடத்தில், காற்றின் வேகம் பலவீனமாக இருப்பதால், மிக நீண்ட விமான ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ளது. மிக உயரமான இடத்தில் இருந்து விமானம் புறப்படுவதால், பயணிகளுக்கு தலைவலியும், காதடைப்பு போன்றவை ஏற்படும்.

விமான நிலையம் அமைந்துள்ள, டாவோசெங் யாடிங்கில் இருந்து, சிச்சுவான் மாகாணத் தலைநகரான செங்டுவுக்கு பேருந்தில் செல்ல இரு தினங்களாகிறது.

தற்போது, விமான சேவை ஆரம்பிக்கப்பட்டதால், 65 நிமிடங்களில், சென்றடைய முடிகிறது. (2)

# பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது

## இன்று முதல் மாநிலம் தழுவிய வாகன பிரசாரம்

(கோவை)

**இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறும் பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என வலியுறுத்தி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் மாநிலம் தழுவிய ரீதியில் வாகன பிரசாரம் இடம்பெறவுள்ளதாக அக்கழகத்தின் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இவ்வாகன பிரசாரம் இன்று ஆரம்பமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதோடு, இது தொடர்பாக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.**

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் ஆயிரக் கணக்கான ஈழத் தமிழர்கள் இராணுவத்தால் போரின் போது கொல்லப்பட்டனர். இந்நிலையில், எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாடு இலங்கையில் நடைபெற்றால், ஈழத்தமிழர்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் 800 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை யாவற்றக்கும் உலக நாடுகள் அங்கீகாரம் அளித்தது போலாகிவிடும்.

எதியோப்பிய மக்கள் மீது நடத்தப்பட்ட கொடுமைகளைக் கண்டித்து அந்நாட்டில் நடைபெற இருந்த குறித்த மாநாடு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது.

மேலும் கறுப்பின மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனவெறியை காரணம் காட்டி தென்னாப்பிரிக்கா பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டது.

அதேபோல இராணுவ ஆட்சியை உருவாக்கியதால் பாகிஸ்தானும், பழங்குடியினருக்காகப் போராடியவரைத் தூக்கிலிட்டு கொன்றதால் நைஜீரியாவும் அவ் அமைப்பில் இருந்து நீக்கப்பட்டன.

தற்போது இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் கனடா கலந்து கொள்வதில்லை என்று அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடைபெற்றால் அடுத்த 2 ஆண்டுகளுக்கு இந் நாடுகளுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைவராவார். இலங்கை மீதான போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் அதனால் மறைக்கப்பட்டுவிடும்.

எனவே இலங்கையில் இம் மாநாட்டை நடத்தக் கூடாது என்று வலியுறுத்தி தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் இன்று மயிலாடுதுறையில் இருந்து வாகனப பிரசாரம் தொடங்கி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி சேலத்தில் முடிவடையவுள்ளது.

இப் பிரசாரப் பயணத்தின் இடையே பல்வேறு பகுதிகளில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டங்களில் மனித நேய மக்கள் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ், ம.தி.மு.க. பொதுச செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

சேலத்தில் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பழ.நெடுமாறன் உரையாற்றவுள்ளார். (2)

# மோடியுடன் இணைந்து செயலாற்ற விரும்பம்

(லண்டன்)

குஜராத் மற்றும் அதன் முதல்வர் நரேந்திர மோடியின் வளர்ச்சி தம்மை ஈர்த்துள்ளதாகவும், அதனால் மோடியுடன் இணைந்து செயலாற்ற விரும்புவதாகவும் பிரிடடன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.


கடந்த 12 மாதங்களில் குஜராத்தில் சட்டத்துறை தொடர்பான வளர்ச்சி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாக பத்திரிக்கை ஒன்றிற்கு கமரூன் வழங்கியபேட்டியில் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளிலும் குஜராத் அடைந்துள்ள வளர்ச்சியால் குஜராத்திற்கு தேவையான உதவிகளை மேற்கொள்ள பிரிட்டன் தயாராக உள்ளதாகவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார். (2)

# ஏழ்மை,ஊழலை கல்வியால் மட்டுமே ஒழிக்க முடியும்

## அப்துல் கலாம் தெரிவிப்பு

(பெங்களூர்)



ஏழ்மை, ஊழல் என்பவற்றை கல்வியால் மட்டுமே ஒழிக்க முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறினார்.

தும்கூர் சித்தகங்கா தொழில்நுட்ப கல்லூரி பொன்விழாவில் உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமெனில் ஏழ்மையையும் ஊழலையையும் அறவே ஒழிக்க வேண்டியது அவசியம். இந்த ஏழ்மை, ஊழலை கல்வியால் மட்டுமே ஒழிக்க முடியும். அதனால் ஒவ்வொருவரும் கல்வியாளராக வேண்டும். நாடு முன்னேற வேண்டும் எனில் அனைவரும் நன்றாக கற்க வேண்டும்.

மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதன் மூலம் அவர்களின் அறிவு தானாகவே வளரும். நாம் எந்த ஒரு பணியையும் செய்யும் போது தன்னம்பிக்கை மிக முக்கியமாகும். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம் என்றார். (2)

# தமிழக மீனவர்களின் முடிவு மத்திய அரசுக்கு அவமானம்

## ஜி.கே.மணி தெரிவிப்பு

(சேலம்)



இந்திய மீனவர்கள் வெள்ளைக் கொடியுடன் சென்று இலங்கை அரசிடம் சரணடைய இருப்பதாக அறிவித்திருப்பது, மத்திய அரசுக்கு தேசிய அவமானம் என்று பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜி.கே.மணி செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழகத்தில் பா.ம.கவினர் மீது பொலிஸார் பொய் வழக்குகளைத் தொடர்ந்து வருகின்றனர். இவர்களின் இந்த நடவடிக்கை கண்டனத்துக்கு உரியது.

இலங்கை இராணுவத்திடம் இருந்து தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது அரசின் கடமை. மீனவர்கள் பிரச்சினைக்கு ஒரே நிரந்தர தீர்வு கச்சத்தீவை மீட்பது மட்டுமேயாகும்.

இலங்கைச் சிறைகளில் வாடும் இந்திய மீனவர்களை விடுவிக்க மத்திய- மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காவிடின் வெள்ளைக் கொடியுடன் இலங்கை அரசிடம் சரணடைய இருப்பதாக, காரைக்கால் முதல் இராமேஸ்வரம் வரையிலான மீனவர் சங்கங்கள் அறிவித்திருப்பது மத்திய அரசுக்கு ஒரு தேசிய அவமானம் ஆகும்.

எனவே, எதிர்வரும் காலத்திலாவது மத்திய, மாநில அரசுகள் தமிழக மீனவர்களைக்காக்க முன் வர வேண்டும் என்றார். (அ-2)



ராஜஸ்தான் மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் காங்கிரஸ் துணைத் தலைவர், ராகுலுக்கு பாரன் மாவட்டத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் ராஜஸ்தானிய பாரம்பரிய தொப்பியை அணிவித்து தொண்டர்கள் வரவேற்றதைப் படத்தில் காணலாம்.

பாரதச் செய்தி

# ஐ.நா.பொதுச் சபை கூட்டத்தில் மன்மோகன் சிங் பங்கேற்று உரை

## நாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச் சபையின் 68 ஆவது கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் எதிர்வரும் 28ஆம் திகதி உரையாற்றவுள்ளார்.

இதை முன்னிட்டு, அமெரிக்காவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் எதிர்வரும 25ஆம் திகதி முதல் ஒரு வாரகால அரசு முறைப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அவருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் வெளியுறவுத் துறை உயரதிகாரிகள் குழுவும் செல்கிறது.

**முக்கிய தலைவர்களை சந்திக்கத் திட்டம்**

இந்தப் பயணத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், சீனா, வங்க தேசம், ஈரான் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளையும் மன்மோகன் சிங் சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடத்திட்டமிட்டுள்ளார்.

இக் கூட்டத்தில், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைத் தடுக்கவும் சர்வதேசப் போர் விதிகளை மீறும் வகையில், இந்திய எல்லையில் பாகிஸ்தான் படைகள் நடத்தும் துப்பாக்கிச் சூடு குறித்தும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மன்மோகன் சிங் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நவாஸ் ஷெரீப்புடன் 28 இல் பேச்சு**

பாகிஸ்தானின் புதிய பிரதமராக அண்மையில் தேர்வு செய்யப்பட்ட நவாஸ ஷெரீப் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி உரையாறறுவார். அவருடன் பிரதமர் மன்மோகன் சிங் மறுநாள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை இரு நாடுகளின் வெளியுறவுத்துறை உயரதிகாரிகள் நியூயோர்க்கில் முகாமிட்டு மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னதாக, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை வோஷிங்டன் நகரில எதிர்வரும் 27ஆம் தேதி மன்மோகன் சிங் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அப்போது இரு நாடுகளிடையே அணுசக்தி வர்த்தக ஒப்பந்தம், பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தங்களில் இரு நாடுகளின தலைவர்களும் கையெழுத்திட திட்டமிட்டுள்ளதாக வெளியுறவுத்துறைவட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, அமெரிக்காவின் நிர்பந்தத்திற்கு பணிந்து அணுசக்தி இழப்பீட்டு சட்டத்தை தளர்த்த இந்தியா முடிவு செய்துள்ளதாக வெளியான செய்தி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அணு உலைகளில் விபத்து ஏற்பட்டால் இழப்பீடு வழங்க இந்தியாவுக்கு யுரேனியம எரிபொருள் வழங்கும் நாடுகள மறுத்து வருகின்றன. இதனால் இநதியா- அமெரிக்கா இடையேயான அணுசக்தி ஒப்பந்தம் செயறபடாத நிலையில் உள்ளது. எனவே, எரிப்பொருள் மற்றும தொழில்நுட்பம் வழங்க நாடுகளுக்கு விபத்து இழப்பீடு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கும் வகையில் விதிகள் தளர்த்தப்படக் கூடும் என்ற செய்தி பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது. மததிய அரசின் இந்த அணுகுமுறைக்கு பாரதிய ஜனதா கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**சல்மான் குர்ஷித் 21 இல் கனடா பயணம்**

ஐ.நா. சபைக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றுவதையொட்டி வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் நாளை கனடா பயணிக்கவுள்ளார். அங்கு அவா எதிர்வரும் 23 ஆம் திகதி வரை தங்கியிருப்பார். அதைத் தொடர்ந்து, பொதுச் சபைக் கூட்டத்தையொட்டி நியூயோர்க் வரும் சீனா, எகிப்து, லிபியா, பாலஸ்தீன், ஜேர்மனி, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் தனித தனியாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (2)

# அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தின் 6 ஆம் வாய்க்கால், ஜெயந்திநகர், உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் வடக்கு, சிவநகர், நேவில் ஆகிய பகுதிகளில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் இதுவரையில் முன்னெடுக்கப்படாமையால் தாம் பல கஷ்டங்களை அனுபவித்துவருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் 6 ஆம் வாய்க் கால், ஜெயந்திநகர், உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் வடக்கு, சிவநகர், நேவில் ஆகிய பல கிராமங்களுக்கு ஏ-9 வீதியில் இருந்து பிரிந்து செல்லும் பிரதான வீதி போக்குவரத்து செய்யமுடியா தளவுக்கு மிகவும் பழுந்தடைந்த நிலையில் உள்ளது.

அபிவிருத்திகள் துரிதமாக நடைபெறுகிறதென்று பெரியளவில் கூறப்படுகின்ற போதிலும் இப் பகுதிகளில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்தில் மிகவும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி உருத்திரபுரம் வடக்கின் ஒரு பகுதிக்கும் உருத்திரபுரம் மேற்கின் சில வீடுகளுக்கும் மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதோடு சிவநகர் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு இதுவரை எந்தவித மான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பாக சிவநகரில் உள்ள பாடசாலையில் பயிலும் மாணவர்கள் கல்வியில் நல்லபெறுபேறுகளைப் பெறுகின்ற போதிலும் தேசிய மட்டத்தில் விளையாட்டுதிறமைகளை வெளிப்படுத்தியுள்ள போதிலும் குப்பி விளக்கிலே இவர்களது வீட்டுக்கற்றலும் விளையாட்டு பயிற்சிகளும் நடைபெறுவது வேதனைக்கு உரிய ஒன்றாகும் என இப்பகுதி பெற்றோர்களும் சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இக்கிராமங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்தும் வாழ்வாதார தொழிலை மேம்படுத்துவதற்கு வாழ்வாதார தொழிலுக்கான உபகரணங்கள் எவையும் வழங்கப்படவில்லை.

உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் ஆகிய கிராமங்களுக்கு வீட்டுத் திட்டமும் வழங்கப்படவில்லை.

இதனால் மழை காலத்தில் யார் தமக்கு தஞ்சம் கொடுப்பது என்ற ஏக்கத்துடன் அம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே தமது நிலையை கருத்திற்கொண்டு யார் உதவமுன் வருவார்கள் என அப்பகுதி மக்கள் காத்திருக்கின்றனர். (ம-254)




# வழிகாட்டல் ஆலோசனை மற்றும் உளசமூக செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு

(பூந்தோட்டம்)

வழிகாட்டல் ஆலோசனை மற்றும் உளசமூகச் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மணிவரை வடமாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண மட்ட சர்வதேச உளநல விழா தொடர்பான கலந்துரையாடலை உள்ளடக்கிய இச் செயலமர்வில் வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார், மடு, முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி, தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடுகின்ற அலுவலர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார். (ம-266)

# வவுனியாவில் வாக்களிப்பதற்கு 89 வாக்களிப்பு நிலையங்கள்

(பூந்தோட்டம்)

வடமாகாண சபை தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள 94 ஆயிரத்து 644 பேர் வாக்களிப்பதற்கு 89 வாக்களிப்பு நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளதாக வவுனியா தேர்தல்கள் பணிமனை அதிகாரிகள் தெரி வித்தனர்.

இதேவேளை இடம்பெயர்ந்த வாக்காளர்களாக இக்கிரிக்கொல்லாவை சாளம்பபுரத்தில் 899 வாக்காளர்களும் யாழ்ப்பாணம், கொக்குவில் பிரதேசத்தில் 3 வாக்காளர்களும் வாக்களிக்கவுள்ளதாகவும் அவர்களுக்கு அப்பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை வெளிமாவட்டங்களில் இருந்து தேர்தல் கடமைக்காக நிய மிக்கப்பட்டுள்ள 250 உத்தியோகத்தர்களுடன் மொத்தமாக சுமார் ஆயிரத்து 400 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்ட செயலகத்தில் வாக்கு எண்ணும் நிலையங்கள் 10 அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இத் தேர்தலில் கடந்த வாரம் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 402 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் ஆயிரத்து 370 பேர் வாக்களித்துள்ளதாகவும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-266)

# 21ஆயிரத்து 281 தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன-கபே அமைப்பு

(பூந்தோட்டம்)

வடமாகாணசபை தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அமைப்பினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் 21 ஆயிரத்து 281 தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் அகமட் மனாப் தெரிவித்தார்.

நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்து தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுவது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வடமாகாண சபை தேர்தலில் வாக்களிக்க தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் பிரஜைகளுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவையை வடக்கு மாகாணத்தில் பல பிரதேச செயலர் பிரிவுகளில் ஆட்பதிவு திணைக்களத்துடன் இணைந்து மேற்கொண்டிருந்தோம்.

இதன் மூலம் எமக்கு 21 ஆயிரத்து 282 தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன. இத்துடன் தேர்தலில் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படும் 8 வகையான அடையாள அட்டைகளில் இலகுவாக பெறக் கூடிய தற்காலிக அடையாள அட்டைகளையும் பெறுவதற்காக நடமாடும் சேவையை மேற்கொண்டிருந்தோம்.

எனினும் சில அரசியல்வாதிகள் தம் மூலம் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கான அடையாள அட்டைகள் இன்னமும் வழங்கப்படவில்லை என தெரிவித்து வருகின்றனர். ஆனால் ஆட்பதிவு திணைக்களம் எமது அமைப்பினூடாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகளை இரவு பகலாக பணிபுரிந்து செய்து முடித்துள்ளனர்.

இந்த வகையில் நேற்று முன்தினம் வரையுமான காலப்பகுதிக்குள் முடிவடைந்த அடையாள அட்டைகளை துரித கதியில் கிடைக்க கூடியவிதத்தில் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எஞ்சியுள்ள 5ஆயிரத்து 277 அடையாள அட்டைகளையும் நேற்று கபே அமைப்பானது ஆட்பதிவு திணைக்கள அதிகாரிகளின் துணையுடன் வட மாகாணத்தில் உள்ள மாவட்ட செயலகங்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் வழங்கி கிராம சேவகர் ஊடாக உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தனர். (ம-266)

# கொலைச் சந்தேகநபர்களை கைதுசெய்ய உத்தரவு

(முல்லைத்தீவு)

இராசையா சுரேஸ் (வயது 35) என்பவரை கொலை செய்தவர்களாக சந்தேகிக்கப்படுபவர்கள் இருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் மரக் கடத்தலில் ஈடுபடுபவர் எனவும் வெட்டப்பட்ட மரங்கள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

வள்ளிபுனம் பகுதிக்கும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கும் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு நீதிபதி மாணிக்கவாசகர் கணேச ராஜா உத்தரவிட்டுள்ளதுடன் இறந்தவரின் மனைவியிடம் உடலை பாரப்படுத்து மாறும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்யுமாறும் சாட்சிகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார். (அ-ம)

# ஓமந்தை வேப்பங்குளத்தில் கலாசார மத்திய நிலையம்

(பூந்தோட்டம்)

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிற்கான கலாசார மத்திய நிலையம் ஓமந்தை வேப்பங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

ஓமந்தை வேப்பங்குளத்தில் அமைந்துள்ள அரசாங்க ஊழியர் வீட்டுத்திட்டத்தில் மேற்படி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், கட்டட நிர்மாணப்பணிகளும் துரிதகதியில் நடைபெற்று வருவதாக வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு நாட்டிலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவு தோறும் பிரதேச கலாசார மத்திய நிலையங்களை நிறுவி கலை சம்பந்தமான பயிற்சிகளை வழங்குவதுடன் கலை விழாக்களையும் நடத்தி வருகின்றது.

அந்த வகையில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிற்கான கலாசார மத்திய நிலையத்தை ஓமந்தை வேப்பங்குளத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் வவுனியா அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திரவின் ஆலோசனைக்கமைய அண்மையில் நாட்டப்பட்டு தற்போது கட்டுமானப்பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றது எனவும் தெரிவித்தார், (ம-266)

# சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளன

(சிவநகர்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடனும் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறிய குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

சுயதொழில் நிதியைப் பெறத் தகுதியான குடும்பங்களை தெரிவு செய்யும் விடய ஆய்வு மாநாடு தற்போது நடைபெற்று வருகிறது.

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தலா 40.000 ரூபா வீதம் சுய தொழில் உதவிகள்வழங்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ்பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கே இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளது.(ம-254)

# வீதி புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் அசௌகரியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள மாணிக்க பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீதி போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் பழுதடைந்துள்ளது.

அத்தோடு 10 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்தப் பகுதிக்கு மின்சாரமும் வழங்கப்படவில்லை.

இக் காரணங்களால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக இப்பகுதி மக்கள் அலைந்து திரிந்து உரிய தரப்பினர்களிடம் நேரடியாக முறையிட்டும்கூட உரிய தரப்பினர் இது விடயத்தில் பாராமுகமாக இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பாக விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு தமக்கு உதவ வேண்டுமென மக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (ம-254)

அறிவினால் தவிர்க்க முடியாத ஒருசெயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது
– செனெக்கா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சுதந்திர சதுக்கத்தில் புத்த மதக் கொடியா

## நவிபிள்ளை கேள்வி

(கொழும்பு)

இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் செய்த ஐ.நா. மன்ற மனித உரிமை ஆணையர் நவிபிள்ளை, கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் அமைந்திருக்கும் முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவின் சிலையை அகற்ற வேண்டும்என்று ஆலோசனை கூறினார்என்ற செய்திகளை அவரது அலுவலகம் மறுத்திருக்கிறது.

இந்தச் சிலை பற்றி அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை, அது அகற்றப்பட வேண்டும் என்று ஒரு போதும் அவர் கூறவுமில்லை என்று அவரது அலுவலக ஊடகத் தொடர்பாளர் ரூபர்ட் கால்வில் கூறியிருக்கிறார்.

இந்த விஜயத்தின் போது, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் புத்த மதக்கொடி மட்டும் பறக்க விடப்பட்டிருப்பது பற்றிய பரச்சினையிலும் நல்லிணக்கம் மற்றும் அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்தல் தொடர்பான கூட்டமொன்றில், கேள்வியொன்றை எழுப்பியதாக வரும் சர்ச்சைகள் தொடர்பாக பதிலளித்திருக்கும், அவரது அலுவலக ஊடகத தொடர்பாளர் ரூபர்ட் கால்வில், இந்த கொடி விவகாரத்தை நவநீதம்பிள்ளை விவாதித்தாகக் கூறினார்.

இலங்கை காலனிய நாடாக இருந்து விடுதலை பெற்றதைக் கொண்டாடும் இந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில், ஒரு மதத்தின் கொடி மட்டும் பறக்கவிடப்படுவது பொருத்தமானதா என்று ஆணையர் கேட்டார். மற்ற மதங்களைப் பின்பற்றுவோர் இதை மற்றவர்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாத ஒரு செயலாகப் பார்க்கலாம் என்றும அவர் கூறினார்.

இதற்கு மாறாக இலங்கை அரசு, இந்த சதுக்கத்தில், தேசியக் கொடியை பறக்க வடுவதைப் பற்றி பரிசீலிக்கலாம். தேசியக் கொடி, அனைத்து இலங்கையர்களுக்கும் , அவர்கள் யார், எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பதையும் மீறி, சொந்தமானது, அது அனைவரையும் ஒன்றுபடுத்தும் ஒரு கொடி, என்று நவிபிள்ளை ஆலோசனை வழங்கினார் என்று ரூபர்ட் கால்வில் கூறினார். (செ–11)

## 13 வருடங்களின் பின் கைது

(கொழும்பு)

2001 ஆம் ஆண்டு மன்னார் உயிலங்குளம் பொலிஸ் காவலரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அப்போது அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி அருங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கடந்த 13 வருடங்களாக தேடப்பட்டு வந்த இந்த பொலிஸ் கான்ஸ்டபிள், மன்னார் முருங்கன் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் சீருடை, துப்பாக்கி மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த பொருட்களுடன் சந்தேக நபர் தப்பிச் சென்றிருந்தார்.

அரசாங்கத்திற்கு சொந்தமான பொருட்களுடன் தப்பிச் சென்றமைக்கு எதிராக பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் அவருக்கு எதிராக நீதிமன்றம் பிடிவிராந்து பிறப்பித்திருந்த நிலையில் அவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். (செ–11)

## மாநாட்டில் பங்கேற்பது குறித்து கனடா விரைவில் முடிவெடுக்கும்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பாக கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் அல்லது வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் விரைவில் இறுதியானதொரு முடிவை எடுப்பார் என்று கனடாவின் மூத்த அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்துள்ளார்.

ரொரன்ரோவில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், தற்போதைய இலங்கை அரசாங்கம் ஜனநாயகத்தின் பெறுமானங்களை மதிக்கவில்லை என்று அவர் இதன் போது தெரிவித்துள்ளார். (அ–2)

## நாளை வடக்கில் தேர்தல் அல்லோ ! நன் மக்காள் பள்ளி எழுந்தருளுமினே !

(திருப்பள்ளி எழுச்சி மெட்டில் பாடவும், படிக்கவும்)

கோழிகள் கூவின குருவிகள் பாடின
கோயில்மணிகள் ஒலித்தன
விடியலுக்காய் கதிரவன் எழுகிறான்
விடியும் நாளை தேர்தல் அல்லவோ!
நன்மக்காள் நம் தமிழ்மக்காள்
பள்ளி எழுந்தருளுமினே !

■

அச்சுதனார் பணிகள் செம்மை பெற்றன
பள்ளிகள் தோறும் பணியாளர்கள்
தங்கியிருந்து எழுந்தே – உங்கள்
வரவிற்காய் காத்திருக்க – பார்த்திருக்க
இன்னும் துயில் கொள்வது முறையோ!
வடக்கில் நாளை தேர்தல் அல்லவோ
நன்மக்காள் நம் தமிழ் மக்காள்
பள்ளி எழுந்தருளுமினே !

■

பல்கோடி ரூபாய் செலவிட்டு
பல்லாயிரம் பிரசுரங்கள் வெளியிட்டு
கூட்டங்கள் கூடி – உங்கள்
கூடங்கள் மாடங்கள் ஏறி
பாட்டுக்கள் பாடி
பாமாலைகள், பூமாலைகள் சூடி
வாக்குகள் கேட்ட வேட்பாளர்
கூப்பிய கரம் கண்டும் இன்னும் – நீங்கள்
புரண்டு புரண்டு உறங்குவது முறையோ!
நன்மக்காள் நம் தமிழ் மக்காள்
பள்ளி எழுந்தருளுமினே !

■

கூப்பிய கையர் ஒருபால்
கும்பிடும் கரத்தார் ஒருபால்
அபயம் அளிக்கும் கையர் ஒருபால்
சுட்டுவிரல் காட்டி நிற்கும் கரத்தார் ஒருபால்
இத்தனை வேட்பாளர் களமிறங்கி
செய்தனர் தேர்தல் பிரசார வேள்வி
இன்னும் நீவிர் துயில் கொண்டால்
தேர்தலால் என் பயன் கொலோ – ஆதலால்
நன்மக்காள் நம் தமிழ் மக்காள்
பள்ளி எழுந்தருளுமினே !

■

குங்குமம் தரித்த கோபாலசாமி – பரிவார
கூட்டமாய் வந்தார் இங்கு
வடக்கில் நடக்கும் தேர்தலை கண்காணிக்க
அவரெல்லாம் வந்திருக்க
அறியாமை இருளில்
நாம் உறங்குவது முறையோ !
நன் மக்காள் நம் தமிழ் மக்காள்
பள்ளி எழுந்தருளுமினே !

■

தேவாரம் பாடிய மூவர் போல்
கபேயுடன் பவ்ரல், சிபிஏ மூன்றுமாய்
வந்தனர் வடக்கின் தேர்தலை கண்காணிக்க
வானவர் வந்தாலும் அதிசயமில்லை – இங்கு
நாம் உறங்குவதல்லோ உலக அதிசயம்
– ஆதலால்
நன் மக்காள் நம் தமிழ் மக்காள்
பள்ளி எழுந்தருளுமினே !

■

உங்கள் வாக்குகள் உங்களுக்கே சொந்தம்
உங்கள் விருப்புகள் உங்களுக்கே உரியது
உங்கள் வாக்கை மற்றவர் அளிப்பது
– முறையோ !
நீவிர் அவமே உறங்கினால் நடப்பது இதுவே
நன் மக்காள் நம் தமிழ் மக்காள்
பள்ளி எழுந்தருளுமினே !
பள்ளி எழுந்தருளுமினே !

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நல்ல வாணிபம்

எவர் அல்லாஹ்வின் திருமறையை ஓதி, தொழுகையையும் கடைப்பிடித்து, நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும், பகிரங்கமாகவும் தானம் செய்து வருகிறார்களோ அவர்கள் நிச்சயமாக நட்டமேயில்லாத ஒரு நல் வாணிபத்தின் (பலனை) எதிர்பார்க்கலாம்; அவர்களுடைய கூலியைப் பூரணமாகக் கொடுத்து, தன்னருளிலிருந்து மேலும் அதிகமாக அவர்களுக்கு இறைவன் கொடுக்கிறான். நிச்சயமாக (இறைவன்) மிக மன்னிப்போனாகவும் நன்றியுடையோரை நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்.

(திருக்குர் ஆன் 35:29-30)

## வெள்ளி நற்சிந்தனை

141

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

பெண்களின் தோற்றத்தைப் பாடல்களில் காட்சிப்படுத்துவது ஓர் இலக்கிய மரபாக நீண்டகாலமாக நிலவி வருகிறது. பெண்மையின் இயற்கையான அழகை எடுத்துரைப்பதோடு அந்த அழகைக் கண்டு அவலப்படும் ஆண்களையும் காட்சிப்படுத்திக் காட்டியுள்ளனர். உலகியல் இன்பங்களில் காமவின்பத்தையே விரும்பி வாழும் ஆண்கள் பலர் உளர். பக்தி வாழ்வியலுக்குப் பெண்கள் மீது கொண்ட விருப்புக் காரணமாக இருந்ததை மணிவாசகர் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்.

மருண்ட மானுடைய நோக்கினையுடைய மகளிருடைய முலையை விரும்புகின்ற என்னைக் கைவிட்டு விடாதே என ஒரு பாடலில் பாடியுள்ளார். அந்த விருப்பத்தை ஓர் உவமை மூலம் விளக்கியுள்ளார். பலாப்பழத்தில் மொய்க்கும் ஈயைப் போல காமத்தின் இனிமையை விரும்பிச் சென்றதாகக் கூறுகிறார். இளமகளிரையே எண்ணிப் பக்தி வாழ்வை விட்டுச் சென்ற மணிவாசகர் மீள வழிபாட்டு வாழ்வியலில் ஈடுபட இறைவனே உதவ வேண்டுமென்கிறார். அப்படி இறைவன் தன்னைப் பக்தி நெறியிலே செலுத்தாவிட்டால் இறைவனைப் பற்றி இழித்துரைப்பேன் என உரைக்கின்றார்.

கடலிலே எழுந்த நஞ்சை உண்ட கரிய மேகம் போலும் கரிய கண்டத்தையுடையவன் என்றும் குணமில்லாதவனென்றும் மானிடன் என்றும் குறை, மதியன் என்றும் பழமையாகிய பெரிய பரதேசி என்றும் பழிப்புரைகள் செய்வேன் என்கிறார்.

இவையாவும் இறைவன் அருட்செயலையும் திருக்கோலத்தையும் பற்றிய செய்திகளாகும். கடல் நஞ்சுண்டமை இறைவனுடைய பெருங்கருணையான செயலாகும். **உண்டான் நஞ்சை உலகமுய்யவே** எனச் சம்பந்தர் பாடியுள்ளார். **வேலை நஞ்சுண்டுனமில்லாத ஒருவன்** எனத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். உயிர்களுக்கு மாறி மாறி நிகழுகின்ற சாத்விக, இராட்சத, தாமத என்னும் முக்குணங்களும் இல்லாதவன். இதனால் குணாதீதன் என அழைக்கப்பட்டான்.

மானை இடத்திருக்கரத்திலே ஏந்தியவன். இது தாருகாவனத்து இருடிகளின் யாகத்தினின்றும் தோன்றிய பேரொலி செய்து கொண்டு எதிர்ந்த மானை இடத் திருக்கரத்தில் தாங்கித் திருச் செவிக்கண்மையில் சேர்த்து அதன் ஆற்றலை அடக்கிய பெருமையையுடையவன் என்பதைப் புலப்படுத் துவதாகும். தேய்மதியன் என்பது ஒரு கலையாகத் தேய்ந்த பிறைமதியைச் சடைமுடியிலே சூடியிருப்பவன். தக்கனுடைய சாபத்தால் தன் கலைகள் தேயப் பெற்று அடைக்கலம் புகுந்த சந்திரனைத் தன்னுடைய திருச் சடையில் தரித்து அவனது கலை வளருமாறு அருள்செய்தமை இவ்வாறு சூடியிருப்பதால் புலப்படுகிறது.


பழைய பரதேசி என்பது அந்நியன் எனப் பொருள்தரும். எனவே இறைவனை இந்த அருட்செயல்களாலேயே கருங்கண்டன், மானிடன், தேய்ந்த அறிவையுடையவன், பரதேசி என்று இழித்துரை செய்வேன் என மணிவாசகர் கூறுவது இன்றைய தலை முறையின் இறைவன் குணங்களையும் கோலங்


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

களையும் இழித்துரைப்பதை ஒத்துள்ளது. ஆனால் அறைவன் பழிப்பினையே என மணிவாசகர் எடுத்துரைப்பது பழிப்பது போலப் புகழமைந்த மொழிகளையே எல்லோரும் அறிய உரத்துக் கூறுதலையே குறித்தது. இத்தகைய கூற்றை வஞ்சப் புகழ்ச்சி என ஒரு அணி அலங்காரமாக இலக் கணகாரர் கூறுவர். இது அவர் பக்தி நிலையில் இறைவனை நெருங்குதலைக் காட்டுகிறது.

**உழை தரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத்து
ஈயினொப்பாய்
விழை தருவேனை விடுதி கண்டாய்
விடின் வேலை நஞ்சுண்
மழை தரு கண்டன் குணமிலி
மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்று என்று
அறைவன் பழிப்பினையே**

# சிம்பாவே கிரி. வீரருடன் உறங்கிய முதலை





சிம்பாவே கிரிக்கெட் வீரர் ஹைற வெட்டலின் படுக்கை அறையில் கட்டிலுக்கு கீழ் முதலையும் தூங்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிம்பாவேயின் முன்னாள் கிரிக்கெட் வீரரான ஹைற வெட்டல் தற்போது தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருகிறார். 40 வயதான இவர் துர்க்வே ஆற்றில் இருந்து 2 கிமீ தொலைவில் தனது அலுவலகத்தோடு, குடியிருப்பையும் அமைத்து வசித்து வருகிறார்.

நேற்றுமுன்தினம் இரவு வழக்கம் போல் பணிகளை முடித்து விட்டு தனது படுக்கையறையில் படுத்து ஹைற வெட்டல் உறங்கத் தொடங்கினார்.

அப்போது அவரது அறைக்குள் சுமார் 8 அடி நீள முதலை ஒன்று ஜன்னல் வழியாக உள்ளே புகுந்தது. இது எதுவும் ஹைற வெட்டலுக்கு தெரியாமல் நன்றாக குறட்டை விட்டு உறங்கினார்.

அறைக்குள் புகுந்த முதலை நைசாக இவரது கட்டிலுக்கு அடியில் புகுந்தது. அங்கு டைல்ஸ் தரையில் ஹாயாக உறங்கியது. காலையில் கண் விழித்த ஹைற வெட்டல் வழக்கம் போல சமையலறையில் தேநீர் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது வீட்டை சுத்தம் செய்யும் பெண் ஹைற வெட்டலின் அறையின் கட்டிலுக்கு அடியில் 8 அடி நீள முதலையைக் கண்டு மயக்கம் போடாத குறையாக அலறி கூச்சல் போட்டார்.

உடனே சத்தம் கேட்டு ஹைற வெட்டலும், அக்கம் பக்கத்தினரும் அங்கு விரைந்தனர். அங்கு முதலையைக் கண்டு பதறினர்.

உடனடியாக மீட்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து முதலையை பிடித்தனர்.

இந்த முதலை அருகில் இருக்கும் துர்க்வே ஆற்றில் இருந்து தப்பி வந்திருக்கலாம் என தெரிவித்தனர். நைல் நதியில் வாழும் வகையைச் சேர்ந்த இந்த முதலையின் எடை சுமார் 150 கிலோ எடை கொண்டது. மனிதர்களை கூட இரையாக்கக் கூடியது என்று முதலை நிபுணர்கள் தெரிவித்தனர்.




# இங்கிலாந்துடனான வெற்றி குறித்து கிளார்க்

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பெற்ற வெற்றியானது பாரியதொரு விடயம் என அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் சுட்டிக்காட்டியுள் ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிரான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரை 2 :1 என்ற ஆட்டக்கணக்கில் கைப்பற்றிய பின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அநேகமானவர்களுக்கு இந்த தொடர் பாரியதொரு விடயம் இல்லாத போதிலும், அவுஸ்திரேலிய வீரர்க ளுக்கு இந்த தொடர் மிகப் பெரிய விடயம் எனவும் அவர் கூறியுள்ளார்.

சொந்த நாட்டில் நடைபெறவுள்ள குளிர்கால ஆஷஸ் தொடரில் இந்த வெற்றி எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதை கூற முடியாது எனவும் மைக்கல் கிளார்க் குறிப்பிட்டுள்ளார்.

ஒருநாள் அணி என்ற வகையில் மகிழ்ச்சியுடன் நாடு திரும்புவதாக அவுஸ்திரேலிய அணித் தலைவர் கூறியுள்ளார்.

# றொனால்டோ ஹெட்ரிக் கோல்

சம்பியன்ஸ் லீக் காற்பந்து போட்டியில் ரியல் மாட்ரிட் அணி வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ ஹெட்ரிக் கோல் அடித்தார்.

துருக்கியைச் சேர்ந்த கெலடசராய் அணிக்கு எதிராக செவ்வாய்க் கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஸ்பெயினின் ரியல் மாட்ரிட் அணி 6-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. பிரிட்டனைச் சேர்ந்த மான்செஸ்டர் அணிக்காக விளையாடிவரும் வேய்ன் ரூனி, ஜேர்மனியைச் சேர்ந்த பேயர் லெவர்குசன் அணிக்கு எதிராக 2 கோல் அடித்தார். இந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் அணி 4-2 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள புகழ்பெற்ற கிளப் அணிகளுக்கு இடையே ஆண்டுதோறும் நடைபெறும் சம்பியன்ஸ் லீக் காற்பந்து போட்டி சர்வதேச அளவில் புகழ்பெற்றது. ஐரோப்பிய காற்பந்து சங்கங்கள் 1955 ஆம் ஆண்டு முதல் இப்போட்டியை நடத்தி வருகிறது. இப்போட்டியின் தகுதிச் சுற்றுகள் கடந்த ஜூலை மாதம் முதல் ஓகஸ்ட் வரை நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற அணிகள் பிரதான சுற்றுக்குத் தகுதி பெற்றன.

பிரதான சுற்றில் (முதல் சுற்று) 32 அணிகள் போட்டியிடுகின்றன. இந்த அணிகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 17ஆம் திகதி தொடங்கிய இப்போட்டி அடுத்த ஆண்டு மே மாதம் வரை நடைபெறும்.

## சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் தகுதிச் சுற்று ஆட்டங்களிலிருந்து

# இரு அணிகள் வெளியேறின

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் தகுதி சுற்றில் அடுத்தடுத்து இரண்டு வெற்றிகளை பெற்ற ஐதராபாத் சன் ரைசர்ஸ், ஒட்டாகோ அணிகள் பிரதான சுற்றை எட்டியுள்ளன. இரண்டு தோல்விகளை சந்தித்த பைச லாபாத், கண்டு ரதா அணிகள் வெளியேறின.

சாம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நாளை முதல் ஒக்டோபர் 6ஆம் திகதி வரை இந்தியாவில் 5 நகரங்களில் நடைபெறுகிறது. இந்த போட்டிக்கு 8 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. இது தவிர மேலும் இரு அணிகள் தகுதி சுற்று மூலம் தேர்வு செய்யப்படுகிறது.

மொகாலியில் ஆரம்பமாகிய தகுதி சுற்றில் ஐதராபாத் சன்ரைசர்ஸ் (இந்தியா), ஒட்டாகோ வோல்ட்ஸ் (நியூசிலாந்து), பைசலாபாத் வால்வ்ஸ் (பாகிஸ்தான்), கண்டுரதா மரூன்ஸ் (இலங்கை) ஆகிய 4 அணிகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் ஏனைய அணியுடன் தலா ஒரு முறை மோதும். முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் பிரதான சுற்றுக்குள் நுழையும்.

போட்டியின் 2ஆவது நாளன்று நடைபெற்ற ஆட்டத்தில ஒட்டாகோ-கண்டு ரதா மரூன்ஸ் அணிகள் சந்தித்தன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஒட்டாகா முதலில் கண்டுரதா அணியை துடுப்பெடுத் தாடுமாறு பணித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டுரதா அணியில் தொடக்க ஆட்டக்காரர் உபுல் தரங்காவை தவிர வேறு யாரும் தாக்குப பிடிக்கவில்லை. முதல் பந்தில் இருந்து 18-ஆவது ஓவர்வரை அணியை தாங்கிப்பிடித்த தரங்கா 76 ஓட்டங்கள் (56 பந்து, 6 பவுண்டரி, 3 சிக்சர்) சேர்த்ததுடன், அணி சவாலான இலக்கை எட்டவும் உதவினார். அவருக்கு அடுத்தபடியாக எந்த வீரரும் 15 ஓட்டங்களை கூட தாண்டவில்லை. சங்கக்கார 13 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் திரிமன்னே 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஒட்டாகோ வேகப்பந்து வீச்சாளர் இயான் பட்லர், ஒரே ஓவரில் 4 பந்து இடைவெளியில் 3 விக்கெட்டுகளை சாய்த்து அசத்தினார். சகலதுறை வீரர் ரையான் டென் டஸ்சாட் 2 விக்கெட்டை வீழ்த்தினார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் கண்டுரதா அணி 9 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்களை எடுத்தது.

**ஒட்டாகோ வெற்றி**

பின்னர் ஆடிய ஒட்டாகோ அணியில் ருதர்போர்டு (20 ஓட்டங்கள்), அணித்தலைவர் பிரன்டன் மெக்கல்லம் (8 ஓட்டங்கள்) ஆகியோர் சீக்கிரம் வெளியேறியதால் அந்த அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது. முதல் 10 ஓவர்களில் 62 ஓட்டங்களே எடுத்திருந்தது.

இதையடுத்து 3ஆவது விக்கெட்டுக்கு ஆட வந்த ரையான் டென் டஸ்சாட், லோகுராச்சியின் ஒரே ஓவரில் 'ஹெட்ரிக்' சிக்சர் பறக்க விட ஆட்டம் ஒட்டாகோவின் பக்கம் திருப்பியது. தொடர்ந்து நீடித்த அவரது சரவெடியை, கண்டுரதா பந்துவீச்சாளர்களால் கட்டுப் படுத்த முடியவில்லை. வெற்றியை நெருங்கியபோது, டஸ்சாட் 64 ஓட்டங்களில் (32 பந்து, 2 பவுண்டரி, 5 சிக்சர்) ஆட்டமிழந்தார். களத்திலே நின்ற ஜேம்ஸ் நீஷம் பவுண்டரி அடித்து (32 ஓட்டங்கள்) இலக்கை எட்ட வைத்தார்.

ஒட்டாகோ அணி 18 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 157 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சகலதுறை வீரராக ஜொலித்த ரையான் டஸ்சாட் ஆட்ட நாயகன் விருதை பெற்றார். ஏற்கனவே பைசலாபாத் அணியை தோற்கடித்து இருந்த ஒட்டாகோ அணி இதன் மூலம் பிரதான சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதல்தர 20 ஓவர் கிரிக்கெட்டில் ஒட்டாகோ அணி தொடர்ச்சியாக பதிவுசெய்த 12ஆவது வெற்றியாக இது அமைந்துள்ளது. கடந்த டிசெம்பர் மாதத்தில் இருந்து ஒட்டாகோ தோல்வியை சந்திக்காமல் பயணித்துக் கொண்டிருக்கிறது.

**ஐதராபாத் அபாரம்**

மற்றொரு ஆட்டத்தில் பைசலாபாத் - ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணி கள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பைச லாபாத் அணியால் 5 விக்கெட்டுக்கு 127 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அணித் தலைவர் மிஸ்பா உல்-ஹக் 56 ஓட்டங்ளுடன் (ஒரு பவுண்டரி, 5 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தொடர்ந்து களம் புகுந்த ஐதராபாத் அணியில் அணித் தலைவர் ஷிகர் தவான் 59 ஓட்டங்களும் (50 பந்து, 6 பவுண்டரி, ஒரு சிக்சர்), பார்த்தீவ் பட்டேல் 23 ஓட்டங்களும் பெற்று வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். பின்னர் டேரன் சேமியின் (14 ஓட்டங்கள்) 'ஹெட்ரிக்' பவுண்டரியுடன் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஐதராபாத் அணி 17.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 131 ஓட்டங்கள் சேர்த்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

2ஆவது வெற்றியை பெற்ற ஐதராபாத் அணியும் சம்பியன்ஸ் லீக் பிரதான சுற்றுக்குள் காலடி எடுத்து வைத்தது.

**பைசலாபாத் வெளியேற்றம்**

இரண்டு தோல்விகளை சந்தித்த பைசலாபாத், கண்டுரதா அணிகள் வெளியேறின.



# தேசிய மட்டப் போட்டிகளில் சென்ஜோன்ஸ் மாணவர்கள் சாதனை

E பாடசாலைகளுக்கிடையிலான தேசிய ரீதியான பளுதூக்கல் போட்டி மற்றும் கராத்தே போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் தங்கம், வெண்கலம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை சமூகத்தினரால் நடத்தப்பட்டது.

தேசிய ரீதியான பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டி, கராத்தே போட்டி என்பன அண்மையில் கொழும்பில் நடைபெற்றிருந்தன.

இதில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.





19 வயதுப் பரிவு பளுத்தூக்கல் போட்டி ஆண்கள் பிரிவில் சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர் உதயகுமார் வினோத்குமார் 69 கிலோக் கிராம் எடைபிரிவில் 200 கிலோக் கிராம் எடையை தூக்கி தங்கப் பதக்கம் வென்றுள்ளார். மற்றும் 105 கிலோ எடைப்பிரிவில் வி.விக்டர் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

15 வயதுப் பிரிவு கராத்தே சண்டை போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர் தனுஸ் வெள்ளி பதக்கம் வென்றுள்ளார்.

தேசிய மட்ட போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் அவர்களது பயிற்றுவிப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராஜா தலைமையில் நடைபெற்றது.

இக் கௌரவிப்பு நிழ்வில் கல்லூரி சமூகத்தினர், பெற்றோர். விளையாட்டு வீரர்கள் என பலர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

# நியூஸ்ரார் பிறிமியர் லீக் ஸ்ரான்லி அணி வெற்றி



நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2ஆவது ஆண்டாக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டி ஒன்று கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஸ்ரான்லி அணி, பற்றீசியன்ஸ் அணியை 3 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களை பெற்றனர்.

மதன் ஆட்டமிழக்காது 64 (தொடரின் 7 ஆவது அரைச்சதம்), உதயன் 18 ஓட்டங்களை பெற்றனர்.

ஸ்பிங்கிள் 02, நிதர்ஸன் 02, தனுஸன் 01 இலக்குகளைக் கைப்பெற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 20 ஓவர்களில் 09 இலக்குகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றனர்.

கரன்ஸ்ரன் 20, பத்மமுரளி 36, கிளிங்ரன் 42 ஓட்டங்களை பெற்றனர். உதயன் 03, வசி 02, கஜதீபன் 02 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் சிறந்த கழக அணி தெரிவுக்கு ஸ்ரான்லி அணி 4.33 புள்ளிகளையும், பற்றீசியன்ஸ் அணி 2.1 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர்.

# எமது நிலங்களை...

உருக்கமாக கேட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபைத்தேர்தலுக்கான வாக்களிப்பு நாளைய தினம் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல் கண்காணிப்புக்கென வந்திருந்த குழுவினர் நேற்றையதினம அகதிமுகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை நேரில் சென்று சந்தித்திருந்தனர்.

அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா? அவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் எவ்வளவு தூரத்தில் உள்ளன என்பன தொடர்பில் ஆராயும் முகமாக் கோபாலசுவாமி தலைமையிலான சர்வதேச குழுவினர் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

இதன் ஒரு கட்டமாக மல்லாகம் கோணப்புலம் முகாம் மற்றும் மயிலட்டி முகாம்களுக்கு தேர்தலை கண்காணிக்கும் சர்வதேச குழு சென்று அங்குள்ள மக்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளனர்.

இந்த சந்திப்புகளில் அவர்களை சூழ்ந்த மக்கள் எமது நிலங்களை மீட்டுத்தாருங்கள் எமக்கு அதுவே போதும் என உருக்கமாக கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவ் மக்கள் சந்திப்புகளில் பெரும்பாலான மக்கள் இந்திய முன்னால் தேர்தல் ஆணையாளரை சந்திப்பதற்கு தயக்கம் காட்டியிருந்தனர்.

அதற்கான காரணத்தினை ஊடகவியலாளர்களால் அவரிடம் கேட்டபோது, நீங்கள் சந்தித்து விட்டு சென்றுவடுவீர்கள் பிறகு என்ன நடக்குமோ என அச்சத்துடன் தெரிவித்தனர்.

இக் குழுவினர் சென்று வந்த இடங்களில் அவ்வப்போது குறிப்பிட்ட சில இடங்களில் மக்கள் சந்திப்புகளை ஏற்படுத்தி வந்ததோடு வீதிகள் மற்றும் மதில்களில் உள்ள தேர்தல் பிரசுரங்களையும் அவதானித்து வந்தனர்.

இவர்களின் மக்கள் சந்திப்பையடுத்து தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய முன்னறிவித்தலின்றி யாழிற்கு திடீர் பயணத்தினை நேற்றையதினம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# நாளைய வடக்குத்...

தேர்தல்தினத்தன்று கபேயின் 800 கண்காணிப்பாளர்கள் வாக்களிக்கும் நிலையங்களில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

நாளை தெற்கிலிருந்தும் விசேட கண்காணிப்பாளர்கள் வரவலைகைகப்படவுள்ளனர். தேர்தல் கண்காணிப்புக்கள் தொடர்பில் கபேயின் அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்கள் எந்த கட்சிக்கு எந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்தார்கள் என்பதை யாராலும் கண்டு பிடிக்க முடியாது என்பதால் வாக்காளர்கள் எவ்வித அச்சமும் இன்றி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியும்.

தேர்தல் கண்காணிப்பு நிறுவனம் என்ற வகையில் வாக்காளர்கள் வாக்களிக்கும் நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கு விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் அனைத்து வேட்பாளர்களையும் வாக்களிக்குமாறு கபே அமைப்பு கேட்டுக் கொள்கிறது.

இறுதியில் தேர்தலிலின் போது இடம்பெற்ற முறை கேடுகள் மற்றும் இராணுவ தலையீடுகள், அச்சுறுத்தல்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை சமர்பிக்கப்படுவதோடு சர்வதேச கண்காணிப்புக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பில் பின்னர் ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இச் சந்திப்பின் போது கபேயின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் மயூரனும் உடனிருந்தார்.

இதேவேளை வடக்குமாகாணத் தேர்தல் நீதியாக இடம்பெறும் என நம்பிக்கையுள்ளதாக யாழ். வருகை தந்ததுள்ள தேர்தல் கண்காணிப்பு குழுவின் தலைவரும், இந்தியாவின் முன்னாள் தேர்தல் திணைக்கள ஆணையாளரும் உள்துறைச் செயலாளருமான கோபலாசுவாமி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# வடக்கில் கூட்டமை...

செயற்படவில்லை.

நடக்கவிருக்கின்ற மாகாண சபைத் தேர்தல்களை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்த அரசுக்கு கடமையுள்ளது. அதிலும் வட மாகாண சபைத் தேர்தல் மீது அரசு அதிக அக்கறை செலுத்துகிறது. அங்கிருக்கும் இராணுவத்தினரைக் கூட நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீதமாகக் குறைத்து சுமுகமான தேர்தல் களத்தை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

இந்த பெருமையாவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே சேரும். அத்தோடு, இந்த மாகாணசபை தேர்தலைப் பொறுத்தமட்டில் மத்திய மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் அரசுக்கு இலகுவாக வெற்றி அடையக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

ஆனால் வடக்கில் தான் சற்று போட்டித் தன்மை மிக்கதான சூழல் காணப்படுகிறது. அங்கு புதிதாக தேர்தல் நடைபெறவிருப்பதால் இது குறித்து சரியான கருத்துக் கணிப்பைக் கூற முடியாது என்றார் வாசுதேவ.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர், வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுவிட்டால் அவர்களின் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவீர்களா? என அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், இல்லை. அவர்களின் விஞ்ஞாபனமானது அரசமைப்புக்கு முரணானதாகும். ஏனைய எட்டு மாகாணங்களுக்கும் கொடுக்கப்படாத எந்தவொரு விசேட சலுகைகளையும் நாம் வடக்கிற்குக் கொடுக்கப் போவதில்லை. அவர்களுக்குக் கொடுக்க முடிந்த அதிகாரங்களை மட்டுமே அரசு கொடுக்கும்.

வடக்கில் கூட்டமைப்பு வெற்றி பெற்றாலும் அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியிடமே உள்ளன. ஆகையால், அவ்வாறான விசேட சலுகைகள் ஏதும் வடக்கிற்கு வழங்குவதாயின் அதை ஜனாதிபதியும், நாடாளுமன்றமும்தான் தீர்மானிக்க வேண்டும் என்றார். (செ-11)

# நீதித்துறை சுதந்திரம்...

இலங்கையில் சட்டம் மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் என்பன முற்றாக அலட்சியம் செய்யப்பட்டுள்ளதாக கானா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் நேனே அபாயாத்தே அமேகச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சங்கத்தின் 2013 - 2014 ஆம் ஆண்டுகளுக்கான மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுநலவாய நாடுகள் அமைப்பு அதன் நம்பகத்தன்மையும் மதிப்பையும் பாதுகாக்க வேண்டும் என்றால் இலங்கை உட்பட அடக்குமுறைகளை மேறகொள்ளும் நாடுகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க சட்டவிரோதமாக நியாயமற்ற விசாரணைகள் மூலம் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

அவரது பதவி நீக்கமானது இலங்கையின் நீதித்துறை சுதந்திரத்தின் மீதான நேரடியான தாக்குதலாகும்.

இலங்கையின் சட்டத்துறையின் பொறுப்புகள் மற்றும் திறனை குறைமதிப்புக்கு உட்படுத்தி இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பில் அந்த அமைப்பு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றார். (செ-4)

# நாட்டின் நல்லிணக்கத்திற்கு...

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமைதியான முறையில் அனைத்து கட்சிகளும் தேர்தலில் பங்கேற்க வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட கால யுத்தத்தின் பின்னர் நடை பெறும் தேர்தலின் மூலம் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவும், அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் வழிகோலும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நீண்டகால இழுபறிக்கு பின்னர் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்த எடுத்தத் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது எனத் தெரிவித்துள்ள பான் கீ மூன் ,

தேர்தலின் பின்னர் அனைத்து தரப்பி னரும் இணைந்து நாட்டில் நல்லிணக் கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.(செ-11)

# கோயில் பூசாரி...

சந்தேகிக்கப்படும் இச் சம்பவத்தில் சாமியார் தாத்தா என அழைக்கப்படும் தாமோதரம்பிள்ளை மனோகரன் (வயது 65) என்ற 5 பிள்ளைகளின் தந்தையான பூசாரியே தனிமையாக இருந்த நிலையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த பூசாரி தலையிலும், கண்களிலும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் பிரஸ்தாப பூசாரியின் மனைவி மற்றும் பிள்ளைகள் எவரும் வீட்டில் இல்லாத நிலையில் மாலை 6.30 மணி யளவில் வீட்டிற்கு வந்து பார்த்தபோது கோவிலில் குறித்த பூசாரி சடலமாக கிடந்துள்ளார்.

எனினும் அன்றையதினம் மாலை 6 மணியளவில் இவர் நடமாடியதை அயலவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த கிளிநொச்சி பொலிஸார் சடலத்தை மீட்டு பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை குறித்த பூசாரி அப்பகுதியில் ஜோதிடம் குறி சொல்வதில் நன்கு அறியப்பட்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (செ-5)

# நிசாந்தன் மீது கடும் தாக்குதல்



வடக்கு மாகாண சபை தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடும் சந்திரலிங்கம் சுகிர்தனின் முக்கிய தேர்தல் செயற்பாட்டாளர் நிஷாந்தன் சுவிகரன் நேற்று மாலை இனந்தெரியாத நபர்களால் தாக்கப்படுள்ளார்.

காரைநகர் செல்லும் வீதியில் கல்லுண்டா வெளியில் இவரை வழிமறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள், "தமிழ்த் தேசியத்துக்காக வேலை செய் கிறாயா? நீதான் யாழ் கலாசாரத்தின் காவலனா?" என்று கேட்டு இவர் மீது பொல்லுத் தடிகளால் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு இலக்கான நிஷாந்தன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் பொலிஸ் பிரிவினரால் வாய்மூல முறைபாடு பதிவு செய்யப்படுள்ளது. (செ-11)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA
*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (வன்னி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. யாழில் 1976 இல் இருந்து...

- An international language, the language of culture
- A language for education, a language for job market and
- A language that is fun to learn

➢ Just say "*Yes, I can... speak French*"

குறிப்பு: தற்போது A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட அனுமதிகள்...

புதிய வகுப்பு மிக விரைவில்... உடன் பதிவு செய்யவும்...
61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)



FALC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES

France, Canada, Swiss, Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Certificates இனை பெறலாம்.

ஐரோப்பிய French (DELF) கடந்த Examஇல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி..

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007) இது வரைக்கும் 726 க்கும் மேற்பட்டோர் எம்மிடம் French கற்றுச் சென்றுள்ளனர்.

ஆரம்பம் : 25.09.13 Wed at 9am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital முன்பாக )

ஆரம்பம் : 25.09.13 Wed at 4pm No. 181, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

*Deutsch, IELTS, B1 Sinhala* வகுப்புகளும்.

0779 789 456



அதி விரைவு சேவை
உள் நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

உங்கள் உறவிகளுக்கு 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான அதிவிரைவு சேவை இப்பொழுது பெற்றுக்கொள்ள



- மிகக்குறைந்த கட்டணம்:
- 3 தொடக்கம் 5 நாட்களில் ஆன சேவை (தேவை ஏற்படின் 3 நாட்கள் சேவை கட்டணம் வேறுபடும்)
- நீங்கள் குறிப்பிடும் முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- இது போன்று மற்றைய நாடுகளுக்கும் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
- முன்னணி பொதிகள் சேவை நிறுவனத்துக்கூடன சேவை
- இந்த கட்டண சலுகை குறிப்பிட சில தினங்கள் மட்டுமே

எங்கும் இல்லாத கட்டணம்
(உதாரணமாக) கனடா 1 Kg தொடக்கம் 10 Kg 1 Kg கட்டணம் 1300/- 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg -900/- மட்டும் அறவிடப்படும்

திருமுருகன் கொம் நெற்
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835 (ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
TCN Express இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6



மாகாண சபைத் தேர்தல் 21.09.2013



வாக்களிப்பது எவ்வாறு?

1. உங்கள் பெயர் 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை முன்கூட்டியே உங்கள் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
2. தேர்தல் தினத்தன்று காலையிலேயே உங்கள் வாக்காளர் அட்டையுடனும் அங்கீகரிக்கப்பட்ட ஆள் அடையாள ஆவணத்துடனும் வாக்குச்சாவடிக்கு விரைந்து சென்று உங்கள் வாக்கை அளியுங்கள்.
3. வாக்காளர் அட்டை உங்களுக்கு கிடைக்கவில்லையெனினும் 2012 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டிருப்பின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொண்டு உங்களுக்கு வாக்களிக்க முடியும்.
4. நீங்கள் தேர்தலின் போது வாக்களிப்பதற்காக உங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டையை வைத்திருக்காவிடின், தேர்தல்கள் ஆணையாளரின் வழிகாட்டலின்படி பின்வரும் ஆவணங்களுள் ஒன்றை நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.

- செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
- செல்லுபடியான கடவுச்சீட்டு
- மதகுருமார் அடையாள அட்டை
- முதியோர் அடையாள அட்டை
- அரச ஓய்வூதிய அடையாள அட்டை
- 2011 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை. (உங்கள் கிராம அலுவலரிடம் ஒப்படைத்து 2012ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிற்கு இணங்க புதுப்பித்துக்கொள்ளுங்கள்.)

5. வலது குறைந்தோரின் வாக்குகளை எளிதில் அடையாளமிடுவதற்காக முகவர் ஒருவரை அழைத்து வர முடியுமென்பதோடு, அத்தகைய உதவியாளர் ஒருவர் இல்லாவிடின் வாக்களிப்புக்கு பொறுப்பான பிரதான அலுவலரான சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருடாக மற்றோர் அலுவலரின் முன்னிலையில் வாக்கினை அடையாளமிட்டுக் கொள்ள முடியும்

மாதிரி வாக்குச்சீட்டொன்று உங்கள் பார்வைக்காக கீழே தரப்பட்டுள்ளது




முதலில் ஒரு கட்சியை அல்லது குழுவைத் தெரிவு செய்து குறித்த இலச்சினையின் எதிரே (X) புள்ளடியிடவும்.

சுயேச்சைக் குழுக்களின் முன்னாலுள்ள இலக்கம் விருப்பு இலக்கங்கலாகா. உங்களது விருப்புக்களை அடையாளமிடுவதற்காக கிடையாகவுள்ள சதுரங்களில் உள்ள இலக்கங்களில் விருப்பத்திற்குரிய இலக்கத்தை தேர்ந்தெடுத்து அவ்விலக்கத்தில் (X)புள்ளடியை இடவும். அதனை அச்சதுரத்திற்கு வெளியே செல்லாதவாறு அதன் உட்பகுதிக்குள் மாத்திரம் இடவும்.

உங்களுக்கு விருப்புக்களை அடையாளமிட முடிவது, ஒரு வேட்பாளருக்கு ஒரு விருப்பை மாத்திரமேயாகும், ஒரு வேட்பாளருக்கோ, இரண்டு வேட்பாளருக்கோ, மூன்று வேட்பாளருக்கோ வெவ்வேறாக விருப்புக்களை அடையாளமிடலாம். அதாவது தேவைப்படின் உங்களுக்கு மூன்று விருப்புக்களை அடையாளமிட முடியும்.

PAFFREL
ப∴வ்ரல்,
12/3, ரொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06.
தொலைபேசி: 011-2514441/2
தொலைநகல்: 011-2514443






Why Choose BCAS for Law?

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.
> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது.
> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.
> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.
> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747

Macro Ads


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.